# தேனும் பாலும்

## திருமறை விளக்கங்களும் திருஷ்டாந்தங்களும்



திருமறை அறிஞர் பாஸ்டர் A.கிறிஸ்டோபர்

# தேனும் பாலும்

(திருமறை விளக்கங்களும், திருஷ்டாந்தங்களும்)

ஆசிரியர்

திருமறை அறிஞர்

**டாக்டர் அ. கிறிஸ்டோபர்**

வெளியிடுபவர்

**விண்ணக அப்பம்**

**நேரு வீதி, சூரம்பட்டி,**

**ஈரோடு – 9. தென்இந்தியா.**



| | | |
|---|---|---|
| RE-EDITION | - | OCTOBER 2008 |
| TOTAL COPIES | - | 2000 |
| COPY RIGHT | - | TO AUTHOR |
| PRICE | - | Rs. 40.00 (IN INDIA) |
| BOOK NUMBER | - | T 11 |

**FOR DETAILS CONTACT**

**WINNAGA APPAM**

**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediff.com**
**Bank A/c : Pastor A. Christopher**
**Bank of India (Erode Branch)**
**A/c No. 820210100005638**

# அணிந்துரை

திருமறைப் பெரியார்
மறைதிரு. யோபு ஞானப்பிரகாசம்
இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்
கோயம்புத்தூர் – 12.

ஆவிக்குரிய புத்தகங்களினால் கிறிஸ்தவ சமுதாயத்தில் புதியதொரு அசைவை உண்டாக்கிய பாஸ்டர் A. கிறிஸ்டோபர் அவர்களுக்காய் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். பலதரப்பட்ட ஆவிக்குரிய தேவையுள்ள மக்களின் உள் வேட்கையைத் தணிக்கும் இவரது எழுத்துக்கள், இனிய தமிழில் எளிய நடையில் கொள்கைப் பிடிப்பில் உறுதியோடு அமைந்திருத்தல் பாராட்டுக்குரியது.

இவர் எங்கள் இ.பெ.அ. ஸ்தாபனத்தின் பெரியார் மாவட்ட மத்திய போதகராகவும் ஈரோடு திருச்சபையின் ஸ்தல போதகராகவும் இருந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறார். எங்கள் ஸ்தாபனத்தின் பத்திரிகையான 'இந்தியா பெந்தெகொஸ்தே நற்செய்தி'யில் தொடர்ந்து குடும்பங்களுக்கான செய்திகளை எழுதி வருகிறார்.

இவரது முந்தின வெளியீடுகளாகிய வளமான பிரசங்கி, ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது, என்தாசனாகிய யோபு போன்ற புத்தகங்கள் மிகப் பெரும் ஆசீர்வாதத்தை வாசகர்களுக்கு கொண்டு வந்தது போல இவரின் புதிய படைப்புகள் பெரும் ஆசீர்வாதங்களை தேவ ஜனத்திற்குக் கொண்டு வர கர்த்தர் கிருபை செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். ஜெபிக்கிறேன்.

–ஆமென்



# என்னுரை

என் இனிய தமிழ் கிறிஸ்தவ வாசகர்களுக்கு இரட்சகர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். என் முந்தின நூல்கள் தங்கள் ஆத்துமாவிற்கும் ஆவிக்குரிய வாழ்விற்கும் ஆசீர்வாதமாய் அமைந்தது போல் உங்கள் கைகளிலிருக்கும் இந்த தேனும் பாலும் உங்கள் வேத அறிவிற்கும் விசுவாச ஜீவியத்திற்கும் நல் உரமாய் அமையுமென்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

உவமையைப் போல் உரம் வேறு ஏதுமில்லை. அதனால் தான் நம் அருள் நாதரும் அருளுரை ஆற்றும்போது அநேக உவமைகளைக் கையாண்டார். இந்நூலில், நடைபெற்ற சம்பவங்களை சுருக்கமாகவும், வேதத்தில் இருந்தும் அறியத்தவறின சில வேத பகுதிகளுக்கான விளக்கங்களை விவரமாகவும் எழுதியுள்ளேன்.

என் மணவாளியே...... நாவின் கீழ் "தேனும் பாலும்" இருக்கிறது. (உன்ன 4 : 11) என்ற வார்த்தையின்படி பால் போன்ற வேத திருஷ்டாந்தங்களும் தேன் போன்ற தெளிவான திருமறைப் பகுதிகளும் ஒவ்வொரு விசுவாசியின் உதட்டிலிருக்க வேண்டியது அவசியம். அத்தகைய அனுபவத்திற்கு ஆண்டவர் அருள்புரிய இதனை அவர் பாதம் சமர்ப்பித்து உங்கள் கரங்களில் தருகிறேன்.

அன்போடும் ஜெபத்தோடும்
அவர் சேவையில்
அ. கிறிஸ்டோபர்
I.P.A. ஜெபவீடு
ஈரோடு – 1.

## படைக்கிறேன் !

பாலும் தேனும் ஓடும்
பரம கானான் செல்ல
தேவ ஜனத்தின் உதடுகள்
தேனும் பாலும் பொழிய
தேசு நிறைந்த இயேசுவே
படைக்கிறேன் இதனை உமக்கு

– ஆக்கியோன்



## தேன்துளிகள்.....

1. வார்த்தை விருதாவாய் திரும்பாது !
2. மேலானதைத் தேடுங்கள் !
3. இன்னும் ஆகுங்கள் !
4. உன் வாலிபத்தில் சிருஷ்டிகரை நினை.
5. வெண்கல சர்ப்பமும் இயேசுவும்.
6. சமாரியா எப்படி வந்தது?
7. யோசேப்பும் இயேசு கிறிஸ்துவும் !
8. கிரியையில்லாத விசுவாசம் செத்தது !
9. ஒளிமயமான தேவன்.
10. இந்தியாவில் பிறந்ததற்காய் மகிழ்கிறேன் !
11. பிறரை உங்களைப்போல் யோசிக்காதீர்கள் !
12. இருக்கிறவராகவே இருக்கிறார் !
13. முக்கனியும் இஸ்ரவேலரும் !
14. வேதப் பிரியர் தேவப் புதல்வர் !
15. இஸ்ரவேலரின் 3 வருகைகள் !
16. கிதியோனின் தோலும் கிறிஸ்துவும் !
17. பேதைகளின் ஆண்டவர் !
18. மகத்துவமுள்ள வேதம் !
19. ஐசுவரியவானாகத் தீவிரிக்காதே !
20. சதுசேயர்கள் என்பவர்கள் யார்?
21. நல்ல கனி கொடுங்கள் !
22. உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக் கடவது !
23. அடக்க முடியாத அபிஷேகம் !
24. பிலேயாம்.
25. பிள்ளைகளின் பிள்ளைகளை காண்பாய் !

26. நவீனப் போதகர்கள்.
27. கர்த்தரை எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்!
28. பிரசங்கி 12–ஆம் அதிகாரம்!
29. மதுவை விரும்பாதே!
30. ஜெபம்.
31. நயவசனிப்பாளர்கள்!
32. வேதாகமத்தில் மரியாள்கள்!
33. இரண்டு தோனியில் கால் வைக்காதீர்கள்!
34. மோசேயின் குடும்பம்.
35. ஊழியம் கொள்ளாமல் ஊழியம் செய்யுங்கள்.
36. பெந்தெகொஸ்தே!
37. பயணம் செய்த எலும்புகள்!
38. நாட்டப்பட்ட செடியாயிருங்கள்!
39. நோவாவின் மூத்த மகன் யார்?
40. நீங்கள் யார் என்று தெரியுமா?
41. ஆவிகளை சோதித்தறியுங்கள்!
42. ஜெப மொழிகள்.
43. இரண்டு அந்தியோகியா.
44. இன்னாருக்கு இன்னாரென்று!
45. ராகேல் திருமணம் எப்போது நடந்தது?
46. தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாதீர்கள்!
47. தாழ்மை உள்ளவர்களுக்கே கிருபை!
48. இஸ்ரவேலரின் காலண்டர்!
49. பார்க்கக் கூடாததும் பார்க்க வேண்டியதும்!
50. சிலரை மாற்றவே முடியாது!
51. எப்படித்தான் புரிய வைப்பது?
52. பிரயாசங்களை விட்டு இளைப்பாறுங்கள்.



53. சில எபிரேய வார்த்தைகளை தெரிந்து கொள்ளுங்கள்.
54. சில கிரேக்க பதங்களை தெரிந்து கொள்ளுங்கள்.
55. குறைவில்லாத வேதம்.
56. அலெக்சாந்தர்.
57. பெற்றுக்கொள்ளத்தக்கதாய் ஓடுங்கள்!
58. யோசேப்பும் தானியேலும்.
59. அன்றியும் ஒரே தரம் மரிப்பதும்...
60. சத்துருக்களுக்காக விண்ணப்பம் பண்ணுங்கள்.
61. எனக்கென்ன தெரியும்!
62. தலைவன் தலைவன் தான்!
63. எதை விதைக்கிறாயோ அதையே அறுப்பாய்!
64. தேவனை வஞ்சிப்பவர்கள்.
65. நான் வெஜிட்டேரியன்.
66. தலைவரின் கடிதம்.
67. மன்னாவும் கிறிஸ்துவும்.
68. தமிழ் வேதாகமம்.
69. யார் இந்த நாஸ்டார்டாம்?
70. பிலிப்பு! பிலிப்பு! பிலிப்பு!
71. போதகர்கள் சொன்னார்கள்.
72. ரூத்தும் எஸ்தரும்.
73. சகலமும் நன்மைக்கே!
74. இஸ்ரவேலரின் – இரவும் பகலும்.
75. ஒருமனப்பட்ட ஜெபம்.
76. இயேசு தாவீதின் குமாரனா?
77. அத்திமரம் துளிர்த்து விட்டது!
78. கதிரியக்கத்தால் கஷ்டகாலம்.
79. மரணம்! மரணம்! மரணம்!
80. ஜீவன்! ஜீவன்! ஜீவன்!

## 1. வார்த்தை விருதாவாய் திரும்பாது!

தேவனுடைய ஊழியராகிய ஸ்பர்ஜன் நாட்டிங்காம் என்னும் பட்டணத்திலுள்ள ஒரு பண்ணையாரின் மனைவியை நேரில் சென்று சந்தித்து அவளின் வியாதிக்காக தொடர்ந்து ஜெபித்து வந்தார். வழக்கத்திற்கு மாறாக அந்த சீமாட்டி கிறிஸ்துவுக்குள் மனமகிழ்ச்சியாயிருந்தாள்.

இக்காட்சியைக் கண்ணுற்ற ஸ்பர்ஜன், "நீங்கள் கிறிஸ்துவை எப்படி கண்டுகொண்டீர்கள்?" என்று கேட்டார், அதற்கு அந்தப் பெண்மணி, "ஒரு பழைய அமெரிக்கத் தினசரி பத்திரிக்கையைக் காண்பித்து இலண்டன் மாநகரில் பிரசங்கம் செய்த ஒரு ஊழியரின் செய்தியினை இப்பத்திரிக்கையில் வாசித்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன்" என்றாள்.

ஆச்சரியப்பட்ட ஸ்பர்ஜன் இந்த அமெரிக்கப் பத்திரிக்கை உங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்று கேட்க, அந்த அம்மையார் ஆஸ்திரேலியாவிலிருந்து எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒரு பார்சலின் மேல் சுற்றப்பட்டிருந்தது என்றார்.

பார்த்தீர்களா! செய்தி கொடுக்கப்பட்டது லண்டனில். அஃது செய்தித்தாளில் வெளிவந்தது அமெரிக்காவில், அப்பத்திரிக்கை சேர்ந்த இடம் ஆஸ்திரேலியா. அது பார்சலாகப் பறந்த இடம் இங்கிலாந்து. அதன்பின் பரலோகத் தூதாய் ஆன இடம் நாட்டிங்காம். ஆம்! கர்த்தருடைய வார்த்தை வீணாகத் திரும்பாது. ஆத்துமாக்களை நிச்சயம் சந்திக்கும்.



## 2. மேலானதைத் தேடுங்கள்!

கண்ணீரைக் கடக்க துடுப்புகளைத் தேடாதீர்கள். காட்டாறுகளைக் கடக்க கர்த்தர் உங்களுக்கு சிறகுகளை வைத்திருக்கிறார்.

## 3. இன்னும் ஆகுங்கள்!

ஒருமுறை D.L. மூடிப் பிரசங்கியார் கிளாஸ்கோ நகரத்தில் கேள்வி பதில் நிகழ்ச்சி ஒன்றினை நடத்தினார். சுமார் ஐயாயிரம் பேர் கூடியிருந்தனர். கூட்டத்தில் ஒருவர் 'புகை பிடிக்கக்கூடாது' என்று வேதத்தில் எங்கு எழுதப்பட்டுள்ளது என்று கேட்டார்.

பிரசங்கியார் மூடி உடனே தாமதியாமல் அப்படி வேதத்தில் எழுதப்படவில்லை. ஆகிலும் அதிலும் மேலான வசனம் உண்டு என்றார். பார்வையாளர்கள் எல்லோரும் திகைத்தனர். மூடி தொடர்ந்தார், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும் (வெளி 22 : 11) இதைவிட சிறந்த பதில் வேண்டுமா!

## 4. உன் வாலிபத்தில் சிருஷ்டிகரை நினை.

ஒருமுறை பிரசித்தி பெற்ற ஊழியர் ஒருவர் தனது ஊழியத்தை முடித்துக்கொண்டு தமது இருப்பிடத்திற்கு திரும்பினார். தனது நண்பரிடம் இன்றைக்கு 2 1/2 பேர் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தனர் என்றார். இதனைக் கேட்ட நண்பர் இரண்டு பெரியவரும் ஒரு சிறியவருமா என்றார். பிரசங்கியார் சொன்னார், இல்லை இல்லை இரண்டு சிறியவர் ஒரு பெரியவர் என்றார்.

சிறியவர்கள் இளம் பிராயத்திலேயே முழுமையாக ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்து விட்டனர். ஆகவே அவர்கள் முழுமையானவர்கள். பெரியவரோ தன்

வாழ்க்கையின் பெரும்பகுதியை நஷ்டமாக்கிவிட்டார். அவர் வாழ்வின் பாதி பகுதியைத்தான் கர்த்தருக்கு கொடுத்தார். அதனால் தான் 2 1/2 ஆத்துமாக்கள் என்றேன் என்றார். விளக்கத்தைக் கேட்ட நண்பர் ஆச்சரியத்தில் மௌனமானார்.

## 5. வெண்கல சர்ப்பமும் இயேசுவும்.

இயேசு ஊழியம் செய்த நாட்களில் வனாந்தரத்தில் வெண்கல சர்ப்பம் உயர்த்தப்பட்டது போல் மனுஷ குமாரனும் உயர்த்தப்படுவார் (யோவான் 3 : 14) என்று சொன்ன வார்த்தையை சற்று சிந்திப்போம்.

வெண்கல சர்ப்பம் சர்ப்பத்தின் சாயலாய் இருந்ததே தவிர அதனிடத்தில் எந்தவித விஷமுமில்லை. அதுபோல இயேசுவும் பாவசாயல் ஆனாரே தவிர அவரிடத்தில் எந்தவித பாவமுமில்லை. சர்ப்பம் மரத்திலே தூக்கப்பட்டது போல இயேசுகிறிஸ்துவும் (சிலுவை) மரத்திலே தூக்கப்பட்டார்.

சர்ப்பம் மோசேயினால் வனாந்திரத்தில் உயர்த்தப்பட்டது போல் இயேசுவும் பிதாவினாலே சிலுவையில் உயர்த்தப்பட்டார். அன்று கொள்ளிவாய் சர்ப்பங்களினாலே கடிபட்டவர்கள் வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து ஜீவனைப் பெற்றார்கள். இன்றோ பாவத்தினால் மாளும் மானிடர் சிலுவையை நோக்கிப் பார்க்கும் போது ஜீவனைப் பெறுகிறார்கள்.

## 6. சமாரியா எப்படி வந்தது ?

சமாரியா மலையை சேமேர் என்பவன் தனது ஆளுகைக்குள் வைத்திருந்தான். யூதாவின் இராஜாவாகிய ஆசாவின் காலத்தில் இஸ்ரவேலில் உம்ரி என்ற அரசன்



ஆண்டான். அவன் சமாரியா மலையை இரண்டு தாலந்து வெள்ளிக்கு வாங்கி அதன் மேல் ஒரு பட்டணத்தைக் கட்டி, அதன் எஜமானாயிருந்த சேமேரின் பெயர் விளங்கும்படி சமாரியா என்ற பெயரைத் தரித்தான். இப்படித்தான் சமாரியா உண்டாயிற்று.

(ஆதாரம் – I இராஜாக்கள் 16 : 24)

## 7. யோசேப்பும் இயேசுகிறிஸ்துவும் !

யோசேப்பு தன் தகப்பனாருக்கு பிரியமாயிருந்தது போல இயேசுவும் பிதாவுக்கு பிரியமுள்ள நேசகுமாரனா யிருந்தார். யோசேப்பு தன் சகோதரர்களிடத்தில் அனுப்பப்பட்டான். அவர்களோ அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதுபோல் இயேசுவும், யூதர்களிடத்தில் அனுப்பப்பட்டார். அவர்களோ சொந்தமாய் வந்த அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

யோசேப்பு வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டது போல இயேசுவும் வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டார். யோசேப்பு காரணமில்லாமல் குற்றம் சுமத்தப்பட்டான், சிறையிலடைக்கப் பட்டான். வெளியே வந்த போதோ சிங்காசனத்தில் அமர்ந்தான். இயேசுவும் கல்லறையில் அடைக்கப்பட்டார். உயிர்த்தெழுந்த போதோ பிதாவோடு சிங்காசனத்தில் அமர்ந்தார்.

யோசேப்பு அந்நிய தேசத்தில் பெண் கொண்டான், இயேசுவும் புறஜாதியில் மணவாட்டி சபையைக் கண்டார். யோசேப்பு மனைவியோடிருக்கும் போது அவன் சகோதரர்கள் வந்து சேர்ந்தார்கள். இயேசுவும் மணவாட்டி சபையோடிருக்கும்போது யூதர்கள் வந்து சேருவார்கள்.

யோசேப்பை முதல் முதல் கண்டபோது அவன் சகோதரர்கள் அறியவுமில்லை, அழவுமில்லை. இரண்டாம்

முறை அவன் தன்னை வெளிப்படுத்தின போதோ மனங்கசந்து அழுதார்கள். அதுபோல் முதல்முறை வந்த இயேசுவை உணராத யூதர்கள் இரண்டாம் வருகையில் இயேசு தம்மை மேசியாவாக வெளிப்படுத்தும் போது யூதர்கள் மனங்கசந்து அழுவார்கள். யோசேப்பு தன் சகோதரர்களுக்கு கோசேன் நாட்டை சுதந்திரமாகக் கொடுத்தான். அதுபோல இயேசுவும் பாலஸ்தீனத்தை யூதர்களுக்குக் கொடுப்பார்.

## 8. கிரியையில்லாத விசுவாசம் செத்தது!

சார்லஸ் பிளான்டின் என்ற பிரெஞ்சுக்காரர் 1859இல் நயாகரா நீர்வீழ்ச்சியின் குறுக்கே கம்பியினைக் கட்டி அந்தக் கம்பியின் மேல் நடந்து கடக்கப் போவதாக பத்திரிக்கையில் விளம்பரம் கொடுத்திருந்தார். இது முடியாத காரியம். இது ஏதோ ஒரு கோமாளியின் கூத்து என்றெண்ணி அந்த விளம்பரத்தை ஒருவரும் கண்டு கொள்ளவில்லை.

ஆனால் அவரோ தாம் சொன்ன சரியான நேரத்தில் அந்தக்கம்பியின் மேல் ஒற்றை சக்கர நாற்காலியை வைத்து தள்ளிக்கொண்டே அக்கரைக்கு வந்து விட்டார். அதைக் கண்ட ஒருவர் ஓடிவந்து ‘உங்கள் விளம்பரத்தை ஒருவருமே நம்பவில்லை உங்கள் திறமையின் மீது எனக்கு அதிக நம்பிக்கை இருந்ததனால் நான் மாத்திரம் வந்திருக்கிறேன்’ என்றார்.

அதைக் கேட்ட பிரெஞ்சுக்காரர் “யாருமே என்னை நம்பவில்லை நீங்கள் என் திறமையின் மேல் இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் மிக்க நன்றி. இப்பொழுது இந்த நாற்காலியில் அமர்ந்து கொள்ளுங்கள். நான் நாற்காலியை உருட்டிக்கொண்டே கடந்து சென்று



அக்கரையில் சேர்த்துவிடுகிறேன்” என்றாராம், அவ்வளவு தான் வந்தவர் ஓட்டம் பிடித்தார்.

அநேகர் இப்படித்தான் இயேசுவை விசுவாசிக்கிறார்கள். ஆனால் சபைக்கு வாருங்கள் என்றால் ஒரே ஓட்டம் தான்.

## 9. ஒளிமயமான தேவன்.

நமது ஆண்டவர் நீதியின் சூரியன் (மல்கியா 4 : 2) அவர் ஜோதிகளின் பிதா (யாக்கோபு 1 : 17) அவரிடத்தில் இருள் கொஞ்சமேனும் இல்லை (1 யோவான் 1 : 5) நிழல்கூட அவரிடத்தில் இல்லை. (யாக்கோபு 1 : 17) அவர் ஒளியை வஸ்திரமாகக் கொண்டிருக்கிறார். சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறார்.

நாமோ ஒளியிலுள்ள பரிசுத்தவான்கள் (கொலோசெயர் 1 : 12) பிதாவின் ராஜ்ஜியத்தில் சூரியனைப்போல் பிரகாசிக்கப் போகிறோம். (மத்தேயு 13 : 43) வானமண்டலத்தில் நட்சத்திரங்களைப் போல் ஜொலிக்கப் போகிறோம். (தானி 12 : 3)

இப்படியிருக்க தேவ ஜனமே உங்கள் வெளிச்சம் அநேகருக்கு முன்பாக பிரகாசிக்கக்கடவது.

## 10. இந்தியாவில் பிறந்ததற்காய் மகிழ்கிறேன்!

அமெரிக்காவிலோ, ஆஸ்திரேலியாவிலோ, ஜப்பானிலோ நான் பிறக்காததற்காய் வருத்தப்படவில்லை.

மாறாக இந்தியத் திருநாட்டில் ஜனனம் எடுக்க தருணம் தந்த ஆண்டவருக்கு துதிகள் கோடி கோடி செலுத்துகிறேன். காரணம் நமது தாயகமாகிய இந்தியாவின் பெயர் நமது வேதாகமத்தில்

எழுதப்பட்டிருப்பதே.

ஆம்! எஸ்தர் முதல் அதிகாரம் முதல் வசனத்தை வாசித்துப் பாருங்கள். 'இந்து தேசம் முதல்' (From India) என்று ஆரம்பிக்கிறது. நான் ஆராதிக்கும் இயேசு வெளிநாட்டு ஆண்டவரல்ல. அவர் இந்தியாவைக் கண்ட ஆண்டவர். நான் வாசிக்கும் வேதப்புத்தகம் எனக்கு அந்நியமான புத்தகமல்ல. இந்தியாவின் சரித்திரத்தை உள்ளடக்கிய புத்தகம்.

இது நமக்கு எத்தனை மகிழ்ச்சி தருகிறது பார்த்தீர்களா? இந்தியாவிற்காய் துதிப்போம். இந்தியாவிற்காய் ஜெபிப்போம்.

## 11. பிறரை உங்களைப் போல் யோசிக்காதீர்கள்!

இங்கிலாந்தில் பிரதமர் வின்செண்ட் சர்ச்சில் ஒரு பைத்தியகார ஆஸ்பத்திரிக்கு திடீர் விஜயம் செய்தார். அவர் உள்ளே நுழையும் போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சுகம் பெற்று வீடு திரும்பும் மாஜி மனநோயாளி ஒருவர் வெளியே வந்தார். அவருக்கு வின்செண்ட் சர்ச்சிலை அடையாளம் தெரியவில்லை. அவரைப் பார்த்து நீங்கள் யாரென்று இந்த மனநோயாளி கேட்க, நான்தான் இந்த நாட்டின் பிரதமர் வின்செண்ட் சர்ச்சில் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் சர்ச்சில்.

அதைக்கேட்ட மாஜி மனநோயாளி சிரித்துக் கொண்டே "கவலைப்படாதீர்கள், சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கிறீர்கள். நான் கூட இங்கு வரும்போது வின்செண்ட் சர்ச்சில் என்று தான் சொல்லிக்கொண்டு வந்தேன். இப்போது சரியாகிவிட்டது.



உங்களுக்கும் சரியாகிவிடும்" என்றார். சர்ச்சில் அதைக்கேட்டு அசந்தே போனார். சில பைத்தியங்கள் எல்லோரையுமே பைத்தியமாக நினைப்பது இக்காலத்தில் வாடிக்கையான வேடிக்கையாகி விட்டது.

## 12. இருக்கிறவராகவே இருக்கிறார்!

ஒருமுறை ஒரு பிரசங்கியார் ஒரு வீட்டிற்குச் சென்றிருந்தார். அப்போது அந்த வீட்டுக்காரருக்கு ஒரு தந்தி வந்தது. அதில் அவரின் ஒரே மகன் விபத்தில் மரித்துப்போனான் என்று தகவல் வந்தது. அந்த வீட்டுத் தலைவன் மிகவும் கலங்கிப் போனான்.

அழுகையும், ஆதங்கமும் நிறைந்த அவர் அந்த பிரசங்கியாரைப் பார்த்து மிகுந்த ஆத்திரமாய் "ஓ! என் மகன் கொல்லப்படுகிற பொழுது இந்த ஆண்டவர் எங்கே போனார்? என்றார். பிரசங்கியார் மிக நிதானமாக "தமது ஒரேபேறான மகன் சிலுவையில் மரித்தபோது எங்கேயிருந்தாரோ அங்கே தான் உமது குமாரன் மரிக்கும் போது ஆண்டவரும் இருந்தார்" என்றார்.

பிரியமானவர்களே! உங்கள் பிரச்சனை தான் உலகத்திலேயே பெரிய பிரச்சனை என்று கலங்காதீர்கள். எல்லோருக்கும் பிரச்சனை உண்டு. முறுமுறுப்பில்லாமல் திடமனதாயிருங்கள்.

## 13. முக்கனியும், இஸ்ரவேலரும்!

மா, பலா, வாழை நம் நாட்டில் முக்கனி என்ற சிறப்பை பெற்றிருப்பது போல் அத்தி, திராட்சை, ஒலிவம் மூன்றும் இஸ்ரவேலருக்கு சிறப்பு வாய்ந்த முக்கனியாகும். இஸ்ரவேலருடைய சிலாக்கியங்களுக்கு இவைகள் அடையாளச் சின்னங்களாகவும் விளங்குகிறது.

திராட்சைச் செடி இஸ்ரவேலரின் ஆவிக்குரிய சிலாக்கியங்களைக் காண்பிக்கிறது. அத்திமரம் இஸ்ரவேலரின் அரசியல் சிலாக்கியங்களைக் குறிக்கிறது. ஒலிவமரம் இஸ்ரவேலரின் மார்க்கசிலாக்கியங்களைக் குறிக்கிறது.

## 14. வேதப்பிரியர் தேவப்புதல்வர் !

ஒருமுறை ஒரு முஸ்லீம் வியாபாரி ஒரு ஐரோப்பியக் கிறிஸ்தவரிடம், ''எனக்கொரு வேதாகமம் வேண்டும் என்றாராம். இவருக்கு மிகுந்த ஆச்சரியம். உங்களுக்கு பைபிள் வாசிக்க இவ்வளவு விருப்பமா? என்று இவர் கேட்க வியாபாரி சொன்னார், ஐயா இதை நான் வாசிக்க கேட்கவில்லை. என் வீட்டில் வைக்கும்படியே விரும்புகிறேன்.

என் வீட்டிற்கு அநேக ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் வியாபாரம் காரணமாக வருகிறார்கள். அவர்கள் எங்கள் வீட்டில் தங்கும் நாட்களில் இந்த பைபிளைக் கண்டு எடுத்து வாசித்தால் அவர்கள் நல்லவர்கள் என்று உணர்ந்து அவர்களோடு வியாபாரத்தை வைத்துக்கொள்வேன். இந்த பைபிளைப் பார்த்தும் படிக்காமல் போகும் மக்களை நாணயம் இல்லாதவர்கள் என்று உணர்ந்து அவர்களை விட்டு விலகி விடுவேன்''

வியாபாரி சொன்ன இந்த விளக்கவுரையைக் கண்டு வியந்துபோனார் அந்த மிஷனெரி. நீங்கள் எப்படி? வேத புஸ்தகம் அலங்காரத்திற்காக வைத்திருக்கிறீர்களா? வாசிக்க வைத்திருக்கிறீர்களா?



## 15. இஸ்ரவேலரின் மூன்று வருகைகள் !

இஸ்ரவேலரின் முதற்பிதாவாகிய ஆபிரகாமை அழைத்து கானான் தேசத்தை சுதந்திரமாகத் தேவன் கொடுத்தார். ஆகிலும் தேவன் ஆபிரகாமுக்கு சொல்லியிருந்தபடியே (ஆதி 15 : 13,14) முந்தி யோசேப்பும் பின்னர் யாக்கோபோடு அவன் குடும்பத்தாரும் எகிப்துக்கு சென்று குடியேறினர்.

தீர்க்கதரிசன நிறைவேறுதலின் காலம் நிறைவேறின போது சுமார் 400 ஆண்டுகளுக்குப் பிறகு மோசேயின் பலத்த கரத்தினால் எகிப்தை விட்டுப் புறப்பட்டு யோசுவாவின் காலத்தில் கானானுக்குத் திரும்பினர். இதுகானான் தேசத்திற்கு இஸ்ரவேலரின் முதலாம் வருகை.

ஏசாயா, எரேமியா தீர்க்கர்களால் சொல்லப்பட்ட முன்னுரைப்படி பாபிலோனியப் பேரரசன் நேபுகாத் நேச்சாரால் பாபிலோனுக்கு சிறைபிடித்துக் கொண்டு போகப்பட்டனர். 70 ஆண்டு கால சிறையிருப்புக்குப்பின் தீர்க்க தரிசனத்தின்படியே எஸ்றா, நெகேமியா போன்றோர் காலத்தில் கானானுக்குத் திரும்பினார்கள். இவர்களின் இந்த இரண்டாவது கானான் வருகையின் பின்னர்தான் இயேசு கிறிஸ்து பெத்லகேமில் பிறந்தார்.

இயேசு கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளாமல் யூதர்கள் தள்ளினதற்கு இரத்தப் பழியாக கி.பி. 70இல் ரோமச் சக்கரவர்த்தி தீத்து இராயனால் சிறைபிடிக்கப்பட்டு துரத்தப்பட்டும் கானானை விட்டு வெளியேற்றப் பட்டனர். அதன்பின் இஸ்ரவேல் என்னும் நாடு வரைபடத்திலிருந்தே நீக்கப்பட்டது. தீர்க்கதரிசன நிறைவேறுதலின் காலம் வந்த போது 1948 மே மாதம் 14 ஆம் தேதி இஸ்ரவேல் நாடு மீண்டும் சுதந்திரம் பெற்று மூன்றாம் முறையாக யூதர்கள்

கானானுக்குத் திரும்புகின்றனர். இவர்களின் வருகை பூரணமடைந்ததும் நம்முடைய இயேசுவின் இரண்டாம் வருகை இருக்கலாம்.

வருகைக்கு ஆயத்தப்படுங்கள்.

## 16. கிதியோனின் தோலும் கிறிஸ்துவும்!

கிதியோனைக் கர்த்தர் விடுதலையின் ஊழியத்திற்கு அழைத்தபோது அவன் தேவனிடத்தில் அடையாளம் கேட்டான். அவன் கேட்டுக் கொண்டதின்படியே தேவனும் அதை அங்கீகரித்தார்.

கிதியோன் ஒரு தோலைப் போட்டான், அதன் மேல் மட்டும் பனி பெய்தது. அந்தத் தோலை நன்றாக பிழிந்து பூமியின் மேல் கிதியோன் போட்டார். இப்பொழுது தோல் காய்ந்திருந்தது. சுற்றியிருந்த பூமியோ பனியினால் நனைந்திருந்தது.

தோல் கிறிஸ்துவையும் பனி தேவ ஆசீர்வாதத்தையும் பூமி மனுக்குலத்தையும் காண்பிக்கிறது. இயேசு ஆசீர்வாதம் நிறைந்தவராய் இருந்தபோது இந்த பூமி தரித்திரத்தில் இருந்தது. கிதியோன் தோலைப் பிழிந்தது போல் இயேசுவும் பிதாவினால் சிலுவையில் பிழியப்பட்டு அவர் தரித்திரராகி வறண்ட மனுக்குலத்தை வளம் கொழிக்கும் ஐசுவரியவான்களாக்கினார். 'நம்மை ஐசுவரியவான் களாக்கும்படி அவர் தரித்திரரானாரே'

## 17. பேதைகளின் ஆண்டவர்!

ஒருசபையில் படிப்பில் குறைந்த ஒரு சகோதரி இருந்தார். அவர்கள் ஜெபிக்கும் விதமே அலாதியானது. எப்போதும் உரிமையோடும் கண்ணீரோடும் ஜெபிப்பார்,



ஒருநாள் அவர்கள் 'ஆண்டவரே நீர் அநாதை தேவன் நீரும் அநாதை நானும் அநாதை நீர் எனக்குத்துணை நான் உமக்குத்துணை என்று ஜெபித்தார். உடனிருந்தவர்களுக்கெல்லாம் ஒரே சிரிப்பு.

அந்த ஏழை சகோதரி அநாதி தேவன் என்பதை, அர்த்தந் தெரியாமல் அநாதை தேவன் என்று சொல்லிவிட்டார். மற்றவர்கள் அதைக்கேட்டு பரிகசித்து விட்டாலும் ஆண்டவரோ உடன் பதிலளித்து விட்டார். ஆம்! நமது ஆண்டவர் வார்த்தை ஜாலங்களையல்ல வாஞ்சையையே அறிகிறார். வார்த்தைகள் தவறானாலும் வாழ்க்கை சரியாய் இருக்கும்போது கேட்பதற்கும் அதிகமாய் பதிலளித்து ஆசீர்வதிக்கிறார்.

## 18. மகத்துவமுள்ள வேதம்!

வேதபுஸ்தகம் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாடு என்னும் இரண்டு பெரும் பிரிவுகளை உடையது. பழைய ஏற்பாட்டில் 39 ஆகமங்களும் அதில் 929 அதிகாரங்களும் அடங்கியுள்ளது.

புதிய ஏற்பாட்டில் 27 ஆகமங்களும் அதில் 260 அதிகாரங்களும் அடங்கியுள்ளது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்புக்கு 'ஜெப்தவஜிந்து' (Septuagint) என்று பெயர். கி.பி. 277இல் அலெக்சாந்திரியா பட்டணத்தில் வைத்து எழுபது யூத வேதபாரகர்கள் மொழி பெயர்த்ததினால் எழுபது என்னும் அர்த்தங்கொள்ளும் ஜெப்தவஜிந்து என்று பெயர் வைத்தனர். கி.பி. 1263இல் H.K.T. ஷாங்கோ என்பவர் அதிகாரங்களைப் பிரித்தார். கி.பி. 1553இல் இராபர்ட் ஸ்டீபன் என்பவர் வாக்கிய அமைப்புகளை உண்டாக்கினார்.

## 19. ஐசுவரியவானாகத் தீவிரிக்காதே!

ஒருவர் தன் இளைய சகோதரனுக்கு மணமுடிக்க எண்ணி பல இடங்களில் பெண் தேடினார். முடிவாகத் தன் இளவலிடம் விவரங்களைக் கூறினார். தம்பி, நான் பார்த்த ஒரு பெண்ணுக்கு வயது இருபது. அதற்கு இருபதாயிரம் ரூபாய் வரதட்சணை கொடுப்பார்கள். இன்னொரு பெண்ணுக்கு வயது இருபத்திஐந்து அதற்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரதட்சணை கொடுப்பார்கள். இதில் எந்தப் பெண்ணை முடிக்கலாம் சொல் என்றார்.

நீண்ட யோசனைக்குப் பிறகு தம்பி சொன்னார், "அண்ணே இந்த இரண்டு பெண்ணும் வேண்டாம். ஒரு முப்பது வயதுப் பெண்ணைப் பாருங்கள். அப்பொழுது முப்பதாயிரம் வரதட்சணை கிடைக்குமே என்றான். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது.

நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்.

## 20. சதுசேயர்கள் என்பவர்கள் யார்?

சதுசேயர் என்பவர்களும் ஆசாரியக் கூட்டத்தாரே! இவர்களுக்கு இப்பெயர் தாவீதின் நாட்களில் பிரதான ஆசாரியனாயிருந்த சாதோக் என்பவனிலிருந்து வந்தது.

இவர்களின் நம்பிக்கை வித்தியாசமானது. உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவ தூதர்கள் இல்லை என்றும் சாதிக்கின்றவர்கள் இவர்கள். பிற்காலங்களில் இந்த சதுசேயக் கூட்டத்தார் ஒரு மதமாகவும் கருதப்பட்டார்கள்.

(ஆதாரம் – மாற்கு 12 : 18, அப். 5 : 17)



## 21. நல்ல கனி கொடுங்கள்!

ஒருமுறை எங்கள் ஜெபவீட்டிற்கு இரண்டு புடலங்காய் காணிக்கை வந்தது. என் துணைவியார் வீட்டிலில்லாத காரணத்தால் நானே அவைகளை நேர்த்தியாக சமைத்தேன். நானும் என் உடனிருந்த சகோதரனும் அவைகளை சாப்பிட்டபோது மிகுந்த ஆச்சரியமடைந்தோம். சமைக்கப்பட்ட புடலங்காயில் சில துண்டுகள் ருசியாயிருந்தது, சில துண்டுகள் கசப்பாயிருந்தது, இவைகள் ஏன் கசக்கிறது? என்ற கேள்வி எங்களைத் துளைத்தது. சற்று நேரத்திற்குள் காரணத்தைக் கண்டுபிடித்து விட்டோம்.

புடலங்காய் செடியின் ஒரு கொடி பந்தலிலும், மற்றொரு கொடி பக்கத்தில் படர்ந்திருக்கும் பாகற்கொடியுடனும் பின்னிக்கொண்டிருந்தது. பாகற்கொடியுடன் பின்னிக் கொண்டிருந்த புடலங்கொடி கசப்பான காய்களைக் கொடுத்தது.

நீங்கள் புடலங்காயாக இருக்கலாம். ஆனால் உங்கள் ஐக்கியம் எங்கே? பாகற்கொடியுடன் என்றால் நீங்கள் கசப்பான கனியைத்தான் கொடுப்பீர்கள். பாகற்காய் கசந்தால் மக்கள் சாப்பிடுவார்கள். புடலங்காய் கசந்தால் மக்கள் குப்பையில் தான் வீசுவார்கள். கிறிஸ்துவில் நிலைத்திருங்கள். கிறிஸ்துவுக்கேற்ற கனி கொடுங்கள்.

## 22. உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக் கடவது!

ஒருநாள் அதிகாலை இருட்டோடு புறநகர் பகுதியில் இருந்து வைக்கோல் சுமையை சுமந்து கொண்டு ஒரு மாட்டு வண்டி சென்னை நோக்கி வந்தது, நகர எல்லைக்கு வந்தபோது ஏன் வண்டியில் விளக்கு எரிய வைக்கவில்லை என்று கேட்டு போலீஸ்காரர் வண்டியை

நிறுத்தி விட்டார். வண்டிக்காரர் வண்டியில் உட்கார்ந்த வண்ணமே, ‘‘விளக்கு எரிகிறதய்யா சரியாய் பாரும்’’ என்று வீர வசனம் பேசினார். ‘‘விளக்கு எரியலப்பா, கீழே இறங்கி வா’’ என்று போலீஸ்காரர் பெருமுழக்கம் செய்தார்.

இதற்கிடையில் அந்தப் பகுதியில் மாபெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பொதுமக்கள் திரளாய்க் கூடிவிட்டனர். பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வண்டிக்காரர் கீழே இறங்கி விளக்கை எடுத்து இதோ எரிகிறதென்றார். ஆகிலும் இதை போலீஸ்காரர் ஒத்துக்கொள்ளவில்லை. காரணம் என்ன தெரியுமா?

வனாந்திர மார்க்கமாய் வண்டி வந்தபோது அடித்த காற்றினால் விளக்கு குபுக், குபுக் என்று எரிந்து கண்ணாடிக் கூடு முழுவதும் கறுப்பாகி விட்டது. எனவே, வெளிச்சம் வரவில்லை. விளக்கு எரிந்தாலும் வெளிச்சம் வெளியே வராததினால் போலீஸ்காரர் வண்டியை நிறுத்திவிட்டார். கண்ணாடிக் கூட்டைச் சுத்தம் செய்த பிறகே வண்டி போக அனுமதி கிடைத்தது.

இன்றைக்கு அநேகருடைய ஜீவியத்தில் ஜீவ ஒளியாகிய கிறிஸ்து உள்ளே இருந்தும், ஜீவியம் கறைபட்டிருப்பதனால் அவர்கள் பிரகாசிப்பதில்லை. கண்ணாடிக் கூட்டை துடைத்திடுவோம். கர்த்தருக்காய் ஜொலித்திடுவோம்.

## 23. அடக்க முடியாத அபிஷேகம்!

புதிதாய் அபிஷேகம் பெற்ற ஒருவர் சபை ஒழுங்கை முக்கியப்படுத்துகிற ஆராதனைக்குச் சென்றிருந்தார். பிரசங்கியார் பேசும்போது இவர் அடிக்கடி அல்லேலுயா! அல்லேலுயா! என்று சொல்லிக்



கொண்டிருந்தாராம். இது அந்த சபையினுடைய ஒழுங்குக்கும் வழக்கத்துக்கும் விரோதமான ஒன்று. எனவே உபதேசியார் மெதுவாக அவர் பக்கத்தில் வந்து நிலைமையை எடுத்துச் சொல்லி அப்படிசெய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். அவரும் சற்றுநேரம் அமைதலாக இருந்தார். ஆனாலும் அடக்க முடியவில்லை. மீண்டும் அல்லேலுயா போட ஆரம்பித்துவிட்டார். ஐயருடைய ஆலோசனையின் பேரில் உபதேசியார் இந்த பிரச்சினைக்குரிய நபரை மெதுவாக ஆலயத்தை விட்டு அழைத்துவந்து பக்கத்திலிருந்த ஐயருடைய அறையில் உட்கார வைத்து ஏதோ ஒரு புத்தகத்தை கொடுத்து இதைப் படித்துக் கொண்டிருங்கள் ஐயர் வந்துவிடுவார் என்று சொல்லிப்போய் விட்டார்.

அந்தப் புத்தகம் 5ஆம் வகுப்பு படிக்கும் ஐயர் அவர்களின் மகனுடைய பூகோளப் புத்தகம், சலிப்போடு வாசித்துப் பார்த்தாலும் மிகுந்த சத்தமாய் அல்லேலுயா! அல்லேலுயா! என்று கத்த ஆரம்பித்து விட்டார். என்னமோ ஏதோவென்று சபையாரெல்லாம் அடித்துப் பிடித்து ஓடிவந்து என்னவென்று விசாரித்தனர். ஒன்றுமில்லை. இந்தப் புத்தகத்தை படிச்சிக்கிட்டேயிருந்தேன். பூமி அந்தரத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது என்பதை வாசித்தேன். தேவன் எவ்வளவு பெரியவர் என்று நினைத்துத் துதித்தேன் என்றார். சபையாருக்கு சப்பென்று போய்விட்டது.

அபிஷேகம் பெற்றவனை எந்த ஆராதனை சட்ட திட்டங்களோ சூழ்நிலைகளோ அழுத்த முடியாது. அமைதியாக்கவும் முடியாது.

## 24. பிலேயாம்.

தீர்க்கதரிசனம் உரைத்த பிலேயாம் ஏதோமின் இராஜாவாகிய பேயோர் என்பவரின் குமாரன் (ஆதி 36 : 31,32) இவனைக் கொண்டு இஸ்ரவேலரை சபிக்க பாலாக் என்னும் மோவாபிய அரசன் தனது தூதுவர்களை இவனிடத்திற்கு அனுப்பினான். இவனையோ கர்த்தர் இஸ்ரவேலரை ஆசீர்வதிக்க வைத்தார். கர்த்தருடைய பிள்ளைகளே கர்த்தருடைய அனுமதியில்லாமல் ஒருவனும் உங்களை சபிக்க முடியாது சபித்தாலும் உங்களைப் பாதிக்காது.

இந்தப் பிலேயாமைக் குறித்து, கூலிக்காக வஞ்சகம் செய்த பிலேயாம் என்று யூதா 1 : 11 லும் அநீதத்தின் கூலியை விரும்பி செம்மையான வழியை விட்டு விலகினவன் என்று II பேதுரு 2 : 15,16 லும் கள்ள உபதேசத்தைப் போதித்தவன் என்று வெளிப்படுத்துதல் 2 : 14 லும் இவன் குறி சொல்லுகிறவன் என்று யோசுவா 13 : 22 லும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரவேலை ஆசீர்வதித்த இவனை இஸ்ரவேல் புத்திரர் பட்டயத்தினால் கொன்று போட்டார்கள் (எண் 31 : 8) இவனுக்கு இப்படிப்பட்ட மரணம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? இஸ்ரவேலர்களை சபிக்க வாய்ப்பு இல்லாமல் போனாலும் அவர்கள் தங்களுக்குத் தாங்களே சாபத்தை வருவித்துக் கொள்ள ஒரு நூதன வழியை இராஜாவுக்கு சொல்லிக் கொடுத்தான்.

இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக இராஜா மோவாபிய பெண்களை அனுப்பி வைத்தான். அவர்களோடு இஸ்ரவேல் புத்திரர்கள் விபச்சாரம் செய்தார்கள். அவர்களில் மயங்கி அவர்கள்



தேவர்களுக்குப் படைக்கப்பட்டதை புசித்து இஸ்ரவேலர் சோரம் போனார்கள் (எண் 25 : 1,2) இதினிமித்தம் தேவ கோபாக்கினை வந்தது.

இஸ்ரவேலருக்கு மாபெரும் சங்காரம் ஏற்பட்டது. இது முழுக்க முழுக்க பிலேயாமின் ஆலோசனையினால் நடைபெற்றது என்று எண்ணாகமம் 31 : 16 கூறுகிறது. இதினிமித்தமே பிலேயாமுக்கு பரிதாப முடிவு ஏற்பட்டது.

## 25. பிள்ளைகளின் பிள்ளைகளை காண்பாய்!

பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பாய் என்கின்ற வாக்குத்தத்தம் (சங்கீதம் 128 : 6) மிக விசேஷமானது. அதை நிறைவேற்றுவதில் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். நம்முடைய முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு இந்த வாக்குத்தத்தத்தை, தேவன் எப்படி நிறைவேற்றினார் என்று என்றைக்காகிலும் யோசித்ததுண்டா?

ஆபிரகாம் நூறு வயதான போது ஈசாக்கைப் பெற்றான். ஆபிரகாமின் நூற்று நாற்பது வயதில் ஈசாக்குக்கு திருமணம் ஆயிற்று. (ஆதி 25 : 20) ஆபிரகாமின் நூற்று அறுபதாவது வயதில் ஈசாக்குக்கு ஏசா, யாக்கோபு பிறந்தார்கள். (ஆதி 25 : 25) ஆபிரகாம் மரிக்கும் போது நூற்று எழுபத்தி ஐந்து வயதுடையவனாயிருந்தான். (ஆதி 25 : 7) அப்பொழுது ஏசா, யாக்கோபு பதினைந்து வயது உடையவர்களாய் இருந்திருப்பார்கள். ஈசாக்குக்கு ஏசா, யாக்கோபு என்ற குமாரர்கள் அறுபதாம் வயதில் பிறந்தார்கள். யாக்கோபு லாபான் வீட்டிற்குச் சென்று பன்னிரெண்டு பிள்ளைகளைப் பெற்ற பின் தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்திற்கு

மம்ரேக்கு வந்தான். ஈசாக்கு பேரப் பிள்ளைகளைப் பார்த்த பிறகு நூற்று எண்பதாவது வயதில் மரித்தான். (ஆதி 35 : 23–28)

யாக்கோபு பெற்றெடுத்த யோசேப்பு எகிப்துக்குப் போனான். அங்கே யோசேப்பு மணமுடித்து எப்பிராயீம் மனாசே என்பவர்களைப் பெற்றான். முதிர்வயதில் யாக்கோபு எகிப்துக்குச் சென்று தன் பேரப் பிள்ளைகளைக் கண்டு ஆசீர்வதித்த பின்னரே (ஆதி 48 : 15) தன் ஜீவனை விட்டான்.

பார்த்தீர்களா! நமது தேவன் தமது வாக்குத்தத்தத்தில் எத்தனை உண்மையுள்ளவர்.

## 26. நவீனப் போதகர்கள்.

ஒருபோதகர் ஒரு வீட்டிற்கு ஜெபிக்கச் சென்றிருந்தார். ஜெப வேளையில் அந்த வீட்டுக்காரப் பெண்மணி கிழிந்த படுமோசமாக இருந்த வேதாகமத்தைக் கொண்டு வந்தார்கள். போதகர் திடுக்கிட்டுப் போனார். “என்னம்மா நீங்கள் இவ்வளவு அழகான வீடு வைத்திருக்கிறீர்கள். ஆனால், உங்கள் வேதாகமம் இத்தனை அலங்கோலமாக இருக்கிறதே என்று கடிந்து கொண்டார்.

அந்தத் தாயாரோ, “ஐயரே நீங்கள் எங்கள் திருச்சபைக்கு வருவதற்கு முன்பு என் வேதாகமம் மிக அருமையாக இருந்தது. நீங்கள் எங்கள் சபைக்கு வந்தவுடன் பிரசங்கத்தின் போது சில அதிகாரங்களைக் குறிப்பிட்டு இது கற்பனை சம்பவம் என்று சொன்னீர்கள். ஆகவே அவைகளைக் கிழித்து விட்டேன். மற்றொரு நாள் ஒரு வேத பகுதியைக் குறிப்பிட்டு இது மூல பாஷையில் இல்லை என்று சொன்னீர்கள். ஆகவே



அவைகளைக் கிழித்து விட்டேன், பிறிதொரு நாள் ஒரு வேத பகுதியைக் குறிப்பிட்டு இதை இடைச் செருகல் என்றீர்கள். எனவே அதையும் கிழித்து விட்டேன்.

இப்படிக் கிழித்து வந்ததனால் தான் என் வேதாகமத்திற்கு இந்தநிலை. நீங்கள் இன்னும் இரண்டாண்டு காலம் இங்கு போதகராக இருந்தால் உங்கள் பிரசங்கத்தினால் இரண்டு அட்டைகளைத் தவிர என் வேதாகமத்தில் வேறொன்றும் இருக்காது என்றார்.

போதகர் முகம் கலையிழந்தது, நவீன போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

## 27. கர்த்தரை எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்!

கிறிஸ்துவுக்குள்ளான ஒரு குடும்பத்தை நான் நன்கு அறிவேன். அவர்கள் ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு ஒரு நல்ல உதாரணத்தை என்னால் சொல்ல முடியும். அவர்களுடைய மகன்களில் ஒருவருக்கு விவாகம் ஒழுங்கு செய்திருந்தார்கள். விவாகத்திற்கு முந்தின நாள் தன்னுடைய அண்ணனுடைய திருமணத்திற்குக் கலந்து கொள்ள வெளியூரிலிருந்து புறப்பட்ட இவர்கள் மகன்களில் மற்றொருவர் விபத்தில் மரித்துப் போனார். எப்படியோ பிரயாசப்பட்டு அந்தப் பிரேதத்தை திருமணம் நடக்க வேண்டிய அந்தக் காலையில் கொண்டு வந்துவிட்டார்கள்.

மற்றவர்கள் எல்லாம் திருமணத்தை தள்ளிப்போடலாமா என்று கூட யோசித்தனர். ஆனால் அந்தக் குடும்பத்தலைவரும், தலைவியும் ஸ்தோத்திரத்தைத் தவிர வேறொன்றையும் செய்யவில்லை. ஒரே வீட்டிலிருந்து காலை 8 மணிக்கு

பிண ஊர்வலமும், மாலை 5 மணிக்கு மண ஊர்வலமும் புறப்பட்டு சென்றது. அந்த வீதியே அசந்து நின்று விட்டது.

இதைவிட முக்கியமானது என்ன தெரியுமா? அடுத்து வந்த ஞாயிறு ஆராதனையில் அந்தத்தாய் சாட்சி சொல்ல எழும்பின போது என்ன சொல்லப் போகிறார்களோ என்று எல்லோருடைய கண்களும் குளமாயிற்று.

“கர்த்தருக்கு ஸ்தோத்திரம் கர்த்தர் எனக்குக் கொடுத்த மகன்களில் கடந்த திங்கட்கிழமை ஒருவனை என் மணவாளன் அழைத்துக்கொண்டார். மற்றொருவனை என் தேவன் மணவாளனாக்கினார்” என்று கணீரென முழங்கினார். ஆவிக்குரியவர்கள் எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் தேவனைத் துதிப்பார்கள்.

## 28. பிரசங்கி 12–ஆம் அதிகாரம்!

பிரசங்கி 12ஆம் அதிகாரத்தை வாசித்துப் பார்த்தால் அது விநோதமாக இருக்கும். இந்த விடுகதைக்கு ஒரு வேத பண்டிதர் இப்படி விளக்கம் கொடுக்கிறார். வாலிபருக்கு சொல்லப்பட்ட இந்த ஆலோசனை வசனங்கள் முழுவதுமாக முதுமைக் காலத்தைக் குறித்தவைகள்.

வீட்டுக் காவலாளிகள் தள்ளாடி என்பது கைகளையும், பெலசாலிகள் என்பது கால்களையும், எந்திரம் அரைப்பவர்கள் என்பது பற்களையும் பலகனி வழியாய்ப் பார்க்கிறவர்கள் என்பது கண்களையும் குறிக்கும் (வசனம் 12 : 3)

எந்திரம் அரைக்கும் சத்தம் பற்தாடைகளையும், கதவுகள் அடைபட்டு என்பது வாய் கண் அடைபட்டு பேசவும், பார்க்கவும் முடியாமல் போகிற நிலையைக் குறிக்கும்.

வாதுமை மரம் பூப்பூத்தது என்பது தலைமயிர்



நரைத்துப் போகுதலையும், மேட்டுக்காக அச்சமுண்டாகி என்பது மரணத்துக்குப் பின் தேவனை சந்திக்கப் பயப்படுதலையும், வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு என்பது முதுகெலும்பு தளர்ந்து போகுதலையும் குறிக்கிறது.

அதற்கடுத்து வரும் வசனங்கள் ஈமக்கிரியைகளின் காரியங்களை விவரிக்கிறது. இப்பொழுது பிரசங்கி 12ஆம் அதிகாரத்தை படித்துப் பாருங்கள். இனிய இதமான அர்த்தம் கிடைக்கும்.

## 29. மதுவை விரும்பாதே!

ஒரு குடிமகன் (?) இருந்தார். அவர் எப்பொழுதும் போதையிலேயே இருப்பார். ஒருநாள் அளவுக்கதிகமாய்க் குடித்து விட்டதனால் ஒரு இடத்தில் வாந்தியெடுத்து மயங்கி வாந்தியை நக்கிக் கொண்டிருந்தார்.

அரை மயக்கத்திலிருந்த குடிமகனுக்கு தனக்கென்ன நேரிடுகிறது என்று சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் முகத்தில் யாரோ வருடுவது மாத்திரம் தெரிகிறது. வாய்திறந்து சொன்னார், “டேய் ஒழுங்காக சேவிங் பண்ணுடா, காசு வாங்கறல்ல! கதை பண்ணாதே” இந்த ஓரங்க நாடகத்தைப் பார்த்து ஓரத்தில் இருந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தனர்.

யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டை? யாருக்குப் புலம்பல்? கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குத் தானே என்கின்ற (நீதி 23 : 28,30) வசனங்களை கவனித்துப் பாருங்கள். பொல்லாத குடிப்பழக்கத்தை விட்டுவிடுங்கள். முடியவில்லையா? இயேசுவிடம் வாருங்கள். விட்டுவிட அவர் பெலனளிப்பார்.

## 30. ஜெபம்

நீங்கள் ஜெபம் சொல்லுகிறவராய் இராமல் ஜெபம் செய்கிறவர்களாய் இருங்கள். முந்தினது – உதட்டின் வார்த்தைகள். பிந்தினது – உள்ளத்தின் வெளிப்பாடு. உள்ளத்தையே தேவன் பார்க்கிறார் – **கிறிஸ்டோபர்.**

## 31. நயவசனிப்பாளர்கள்!

ஒருமுறை ஒரு தகப்பனும், மகனும் வெளியூருக்குப் பேருந்தில் போனார்கள். ஓட்டுநருக்கு அருகில் மாட்டப்பட்டிருந்த படத்தைப் பார்த்து “அப்பா இந்தப் படத்தில் இருப்பது யார்?” என்று மகன் கேட்டான். இது இந்த பஸ்சினுடைய முதலாளி என்று அப்பா சொன்னார். அடுத்து அவர்கள் வேறொரு பேருந்துக்கு மாறி பயணத்தைத் தொடர்ந்தனர். அது ஒரு அரசுப்பேருந்து. அதிலும் ஒரு படம் மாட்டப்பட்டிருந்தது. “இந்தப் படத்தில் இருப்பது யார்?” என்று மகன் அப்பாவைக் கேட்டான்.

“அவர்தான் புலவர் திருவள்ளுவர்” என்று அப்பா சொன்னார். திருவள்ளுவர் என்றால் யார்? என்று மகன் கேட்டான். இவருக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை. உடனே, இவர் இந்த பஸ்சுக்கு முதலாளி என்று சொல்லிவிட்டார். பையனும் விடவில்லை. இந்த முதலாளி ஏன் சட்டை போடவில்லை என்று கேட்டான். அப்பா சாமர்த்தியமாக சொன்னார். பஸ் நஷ்டத்தில் போகிறது. எனவே, அவர் நொடிஞ்சு போய் சட்டை போடவில்லை என்றார்.

இப்படித்தான் ஒரு சிலருக்கு உபதேசத்தை சொன்னால் புரியவில்லை. சொல்பவர்களுக்கும் புரியும்படி சொல்லத் தெரியவில்லை. ஆகவே தான் தங்கள் வசதிற்கேற்ப வசனங்களை மாற்றிக் கொள்கிறார்கள். இந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட அப்பாக்களும் அப்பாவி



மகன்களும் நிறையவே சபையில் இருக்கிறார்கள்.

## 32. வேதாகமத்தில் மரியாள்கள்!

வேதாகமத்தில் ஒரே பேருடைய பலர் இருப்பதினால் சில சம்பவங்களில் குழப்பம் ஏற்படுகிறது. வேதாகமத்தில் மரியாள் என்கிற பெயரில் ஆறு பேர் இருக்கின்றனர். மத்தேயு 1 : 13 இல் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த கன்னிகையாகிய மரியாளிடத்தில், இவர் இயேசுவின் தாயாகிய மரியாள் என்று அழைக்கப்படுகிறார். லூக்கா எழுதின சுவிசேஷம் 8 : 2இல் ஏழு பிசாசுகளிடமிருந்து விடுதலையாக்கப்பட்ட மகதலேனா மரியாளைக் குறித்து வாசிக்கிறோம். இவர் இயேசுவின் பின் ஊழியம் செய்து வந்தார். இவருக்கே உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து முதல் முதல் தரிசனமானார்.

மூன்றாவது மரியாளைக் குறித்து லூக்கா 10 : 38 முதல் 40 வசனங்களில் வாசிக்கிறோம். இவள் நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்று இயேசு சொன்னார். மாற்கு 14ஆம் அதிகாரத்தில் இயேசுவை தைலத்தினால் அபிஷேகம் பண்ணினவள் இவளே. இவளுக்கு பெத்தானியா மரியாள் என்று பெயர். நான்காவது மரியாளுக்கு கிலேயோப்பா மரியாள் (யோவான் 19 : 25) என்று பெயர். இவள் சின்ன யாக்கோபு, யோசே என்பவர்களுக்குத் தாயானவள். (மாற்கு 15 : 40)

ஐந்தாவது மரியாள் அப்போஸ்தலர் நடபடிகள் 12 : 12 இல் சொல்லப்பட்ட யோவான் என்னும் பேர் கொண்ட மாற்குவின் தாயாகிய மரியாள். இவளுடைய வீட்டிற்கு சிறைச்சாலையை விட்டு வெளியேறிய பேதுரு சென்றார். இவளுடைய குமாரன் மாற்கு சிறந்த ஊழியக்காரராக விளங்கினார்.

ஆறாவது மரியாளைக் குறித்து ரோமர் 16 : 6இல் எங்களுக்காக பிரயாசப்பட்ட மரியாள் என்று அப்போஸ்தலனாகிய பவுலால் புகழப்பட்ட ரோமாபுரி மரியாள்.

## 33. இரண்டு தோணியில் கால் வைக்காதீர்கள்!

சுதந்திரப் போராட்ட வீரர்களில் வ.உ. சிதம்பரம்பிள்ளைக்கு ‘கப்பலோட்டிய தமிழன்’ என்ற சிறப்பு பெயர் உண்டு. அதைப்போலவே இன்று கிறிஸ்தவர்களும் கப்பல் ஓட்டும் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். Member ‘ship’ ஓரிடமும், Fellow ‘ship’ ஓரிடமும் வைத்துக் கொண்டிருக்கின்றனர். (ஐக்கியம் ஓரிடம். அங்க உரிமை ஓரிடம்) இப்படி இரட்டைச் சவாரி செய்பவர்களின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியது.

இப்படி இரண்டு இடங்களில் Ship வைத்துக் கொண்டு இருந்த ஒருவர் திடீரென மரித்துவிட்டார். சந்தா கட்டினபடியால் சபை ஐயர் தமது சகாக்களுடன் சவ அடக்கத்திற்கு வந்து விட்டார். சபை கூடுதலுக்கு ஒழுங்காய் வந்தபடியால் சபை போதகர் தமது குழுவுடன் வந்துவிட்டார். ஆக Membership சபையாரும், Fellowship சபையாரும் நாங்கள் தான் இவரை அடக்கம் செய்வோம் என்று ஒருவர் மாறி ஒருவர் மூச்சு விடாமல் பேசிக்கொண்டிருந்தனர். பிரச்சனை மும்முரமானது. முடிவு என்னவாயிற்று தெரியுமா?

உங்களுக்கேன் வம்பு! நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்று ஊராரே பெட்டியைத் தூக்கிக் கொண்டுபோய் அடக்கம் செய்து விட்டார்கள்.

பார்த்தீர்களா! பரிதாபத்தை, இரண்டு சபைகளில் ஐக்கியம் வைத்திருந்தால் கல்லறைக்குப் போவதும் கஷ்டம், கர்த்தர் வருகைக்குப் போவதும் கஷ்டம். ஒரே சபையில் இருங்கள். ஒழுங்கான சபையில் இருங்கள்.



## 34. மோசேயின் குடும்பம்.

மோசேயைக் குறித்து அதிகமாகத் தெரிந்து வைத்திருக்கும் கிறிஸ்தவர்கள் அவரின் குடும்பத்தாரைக் குறித்து அறியாதிருப்பது வருத்தமானதே.

மோசேயின் தகப்பனார் அம்ராம். அவனுடைய தாயார் பெயர் யோகெபேத் என்பதாகும். (யாத்திராகமம் 6 : 20) அவருடைய சகோதரி மிரியாம், மோசேயைவிட பல ஆண்டுகள் மூத்தவர் என்று யாத்திராகமம் 2 : 4 முதல் 8 வசனங்களில் காண்கிறோம்.

மோசேயின் சகோதரனாகிய ஆரோன் 3வயது மூத்தவர் என்று யாத்திராகமம் 7 : 7 கூறுகிறது.

மோசே எகிப்தினுடைய தர்க்க சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்த மிகப்பெரிய பண்டிதர் என்று அப்போஸ்தலர் 7 : 22 கூறுகிறது. மோசேயின் மாமனார் எத்திரோ என்னும் ரெகுவேல் மீதியான் தேசத்து ஆசாரியன். இவரது ஏழு குமாரத்திகளில் ஒருத்தியாகிய சிப்போராள் என்பவளை மனைவியாக மோசே கொண்டார். மோசேக்கு கெர்சோம், எலியேசர் என்று இரண்டு குமாரர் இருந்தார்கள். (1. நாளாகமம் 23 : 15)

மோசேயின் ஊழியத்தில் உறுதுணையாயிருந்த ஊர் என்பவர் மிரியாமின் கணவனாக இருக்கலாம் என்று சில பண்டிதர்கள் கருதுகிறார்கள். நாற்பது ஆண்டுகள் அரண்மனையிலும், நாற்பது ஆண்டுகள் ஆடு மேய்ப்பதிலும், நாற்பது ஆண்டுகள் அற்புதம் செய்யும் மாபெரும் ஊழியத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மோசே 120வது வயதில் மரித்தார். (உபாகமம் 34 : 7)

## 35. ஊழியம் கொள்ளாமல் ஊழியம் செய்யுங்கள்.

இலங்கையிலுள்ள விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களில் ஒருவரான கிட்டு ஒரு பேட்டியின்போது தன் தலைவரைக் குறித்து சொன்ன வார்த்தைகள் மிகவும் சிந்தனைக்குரியது.

எங்களின் தலைமறைவுக் காலங்களில் எங்கள் தலைவரை பத்திரமான ஒரு இடத்தில் வைத்துவிட்டு எங்கள் பணித்தளங்களை சென்று பார்த்துவிட்டுத் திரும்பும் போது எங்களுக்கு மிகப்பெரிய ஆச்சரியம் காத்திருக்கும். எங்கள் தலைவர் பிரபாகரன் நாங்கள் மாற்றிவிட்டு சென்ற எங்கள் துணிமணிகளை சுத்தம் செய்து அழகாக மடித்து அதற்குரிய இடத்தில் வைத்திருப்பார். நாங்கள் எவ்வளவு சொல்லியும் அதை அவர் விடுவதாக இல்லை. இப்பேர்ப்பட்ட அன்புக்கு உரிய செயல்களினால் தான் அவர் எங்களது உள்ளத்தில் உயர்ந்த இடத்தில் இருக்கிறார்.

கிட்டு கூறிய இந்த வார்த்தைகளை ஆவிக்குரிய தலைவர்கள் சிந்திக்க வேண்டியது அவசியம். பூமிக்குரிய ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க நினைக்கும் தலைவனே இப்படியிருக்கும் போது ஆவிக்குரிய இராஜ்ஜியத்தை கட்ட நினைக்கும் ஊழியர்கள் எத்தனையாய் தங்களைத் தாழ்த்த வேண்டியது அவசியமாயிருக்கிறது.

வேத வசனம் சொல்வதை கவனியுங்கள். உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும் தலைவன் பணிவிடைக் காரனைப் போலவும் இருக்கக்கடவன். (லூக்கா 22 : 26) அப்படியே மனுஷ குமாரன் ஊழியம் கொள்ள வராமல் ஊழியம் செய்யும்படியே வந்தார்.

நம்முடைய தலையாகிய கிறிஸ்து தன்னுடைய ஊழிய நாட்களில் இவ்விரண்டு வசனங்களுக்கு சாட்சியாக சீடருடைய பாதங்களைத் தாமே கழுவி பணிவிடை செய்து காண்பித்தார். தலைமைப் பொறுப்பை வகிக்க விரும்புகிறவர்கள் பணிவிடைக்காரர்களாக மாற ஒப்புக் கொடுப்போம்.



## 36. பெந்தெகொஸ்தே !

பெந்தெகொஸ்தே என்றால் ஐம்பது என்று பொருள். பழைய ஏற்பாடு காலத்தில் இஸ்ரவேலர்கள் பஸ்கா பண்டிகைக்குப் பின்பு ஐம்பதாவது நாளில் வருடாந்திர பண்டிகையாகக் கொண்டாடினார்கள். இதைக்குறித்து லேவி 23 : 15–21 வசனத்தில் விவரமாக எழுதப்பட்டுள்ளது. அறுப்பின் முதல் அரிக்கட்டை கர்த்தருக்கு அசைவாட்டுக் காணிக்கையாகக் கொண்டு வரும் ஓய்வு நாளுக்கு மறுநாள் எண்ணத் துவக்கி ஏழு ஓய்வு நாளுக்கு அடுத்து வரும் ஐம்பதாவது நாளில் போஜன பலியை கர்த்தருக்குப் படைத்தார்கள். இதை வாரப்பண்டிகை என்று யாத்திராகமம் 34 : 22இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசு உயிர்த்தெழுந்த ஐம்பதாவது நாளில் சரியாக இந்த பெந்தெகொஸ்தே நாள் வந்தது. அந்த நாளில் மேல் வீட்டில் கூடியிருந்த சீஷர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் முதல் முறையாய் இறங்கினார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் முதற்பலன் அசைவாட்டுக் காணிக்கையாய் படைக்கப்படுவது போல் உயிர்த்தெழுந்த முதற்பலனாகிய கிறிஸ்துவும் பிதாவின் சமூகத்திற்கு ஏறிச் சென்றார். ஐம்பதாவது நாளில் போஜனப்பலி படைக்கப்படுவது போல் இயேசு உயிர்த்தெழுந்த ஐம்பதாவது நாளில் பரிசுத்த ஆவியானவர் திருச்சபையின் மேல் இறங்கினார். எனவே

பெந்தெகொஸ்தே என்ற வார்தை கிறிஸ்தவத்தில் தெய்வீக அனுபவத்தின் அடையாளமாகத் திகழ்கிறது.

## 37. பயணம் செய்த எலும்புகள்!

எலும்புகள் பயணம் செய்ததா? என்று கேட்கிறீர்களா. வாசித்துப்பாருங்கள் ஆதி 50 : 25ஐ. தான் உயிரோடிருக்கும் பொழுதே தான் மரித்த பின் தனது எலும்புகளை பத்திரப்படுத்தி, கர்த்தர் உங்களை சந்தித்து கானானுக்குக் கொண்டு போகும் போது உடன் எடுத்துச் சென்று கானான் தேசத்தில் அடக்கம் செய்யுங்கள் என்று யோசேப்பு சொன்னார்.

அவரது நம்பிக்கையின்படியே பல நூறு ஆண்டுகளுக்குப் பின் மோசேயின் நாட்களில் கர்த்தர் இஸ்ரவேலரை சந்தித்து எகிப்தை விட்டு புறப்படப் பண்ணின போது அவர்கள் யோசேப்பின் எலும்பை எடுத்துக்கொண்டு கானானுக்குப் பயணமானார்கள். (யாத் 13 : 19)

நாற்பது ஆண்டுகள் வனாந்திர யாத்திரையில் யோசேப்பின் எலும்புகளும் கூடவே சென்றது, கானான் தேசத்தை அவர்கள் சுதந்தரித்துக் கொண்டபோது அங்கு யோசேப்பின் எலும்புகள் அடக்கம் பண்ணப்பட்டது. (யோசுவா 24 : 32) அந்நிலம் யோசேப்பின் புத்திரருக்குச் சுதந்திரமாயிற்று.

எகிப்தை விட்டு ஜீவனுள்ளவர்கள் மாத்திரமல்ல. மரித்தோரும் புறப்பட்டார். கானானில் ஜீவனுள்ளோர் மாத்திரமல்ல, மரித்தோரும் சுதந்தரித்துக் கொண்டனர். அது போலவே இயேசுவின் வருகையில் மரித்த பரிசுத்தவான்கள் பூமியைவிட்டு எழும்பி பரம கானானை சுதந்தரித்துக் கொள்வார்கள்.



## 38. நாட்டப்பட்ட செடியாயிருங்கள்!

சங்கீதக்காரனாகிய தாவீது, “நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவ மரத்தைப் போலிருக்கிறேன்” என்று சங்கீதம் 52 : 8இல் கூறுகிறார்.

எங்கள் ஊர்ப் பூங்காவில் அரசு சார்பாக அடிக்கடி கூட்டம் நடக்கும். கூட்டத்தன்று அழகான மேடை போடுவார்கள். அந்த மேடையிலே அழகாக தொட்டி செடிகளை வைப்பார்கள். அடுத்து தொட்டி செடிகள் எல்லாம் பொதுப்பணித்துறை அலுவலகம் சென்றுவிடும். மீண்டும் அடுத்த கூட்டம் நடக்கும்போது மக்கள் வருமுன்பே இந்த தொட்டிகள் வந்துவிடும். ஆண்டுகள் பல கடந்தாலும் அது ஒரு அங்குலம் கூட உரிய வளர்ச்சியைப் பெற்றிருக்காது.

அப்படியே இக்காலத்து விசுவாசிகள் தேவனுடைய சபைக்கு கன்வென்ஷன் விசேஷித்த கூட்டங்களுக்குத்தான் வருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் உரிய வளர்ச்சியை ஒருக்காலும் பெற்றுக் கொள்ள முடியாது. நீங்கள் தொட்டி செடிகளாய் அல்ல. நாட்டப்பட்ட செடிகளாய் இருங்கள். தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த காலஞ்சென்ற கர்த்தருடைய தாசன் பாஸ்டர் J.F. ரோலன்ஸ் அவர்கள் தனது பத்திரிக்கையில் விசுவாசிகளைக் குறித்து கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். Some believers are like pillar, some are like cater pillar. ஆம், சில விசுவாசிகள் சபையில் அசையாத தூண்களாக இருக்கிறார்கள். சிலரோ அலைந்து திரியும் கம்பளிப் பூச்சிகளாய் இருக்கிறார்கள். ஒலிவ மரமாயிருங்கள், தூண்களாயிருங்கள்.

## 39. நோவாவின் மூத்த மகன் யார்?

நோவாவுடைய குமாரர் சேம், காம் யாப்பேத் ஆகிய

மூவரே. இவர்களில் மூத்தமகன் யார்? என்று உங்களைக் கேட்டால் சேம் என்று உடனே சொல்லிவிடுவீர்கள். ஆனால் உண்மை அதுவல்ல.

யாப்பேத்தே மூத்த மகன். ஆச்சரியமாய் இருக்கிறதா? ஆதியாகமம் 10ஆம் அதிகாரம் 21 ஆம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். சேம் ஏபேர் என்னும் சந்ததியார் எல்லாருக்கும் தகப்பனும் மூத்தவனாகிய யாப்பேத்துக்கு தம்பியுமாய் இருந்தானென்று தெளிவாக எழுதியுள்ளது. பின்னே ஏன் சேமுடைய பெயர் முதலில் எழுதப்பட்டுள்ளது. அப்படி எழுதப்பட்டதற்கொரு சிறப்புக் காரணமுண்டு. சேமுடைய வம்சாவழியில்தான் நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிறந்தார் (லூக்கா 3 : 36) எனவே வேதத்தை வாசிக்கும் போது முன்னும் பின்னும் கவனித்து வாசியுங்கள். (தமிழ் மற்றும் ஆங்கில வேதாகமங்களின் அடிப்படையில் இக்கருத்து தொகுக்கப்பட்டது.)

## 40. நீங்கள் யார் என்று தெரியுமா?

★ ஓ.... நீங்கள் தேவனின் சம்பத்து (மல் : 3 : 17)
★ ஆரோக்கியமுள்ள கொழுத்த கன்றுகள் (மல் : 4 :2)
★ வல்லமையான உதய சூரியன்கள் (நியா : 5 : 31)
★ புடமிடப்பட்ட சுத்த தங்கங்கள் (யோபு : 23 : 10)
★ காலத்தே கனிதரும் விருட்சங்கள் (சங் : 1 : 3)
★ காயாத பச்சையான ஒலிவமரங்கள் (சங் : 52 : 8)
★ வானமண்டலத்தில் ஜொலிக்கும் விண்மீன்கள் (தானி 12 : 3)



## 41. ஆவிகளை சோதித்தறியுங்கள்!

ஒரு இளம் பெண் ஒருவருக்கு ஒரு விநோதமான வியாதி, திடீரென்று கழுத்து தோள்பட்டைக்கு நேராகத்திரும்பியது. கண் விழிகள் சொருகிக் கொண்டு வெண்படலம் மாத்திரமே தெரியும். இப்படி சுயநினைவின்றி சில மணிநேரங்கள் இருப்பார்.

நரம்பியல் மருத்துவர் உட்பட பல நிபுணர்கள் அவளை சோதித்தறிந்து இவளுக்குள் வியாதியே இல்லையென்று சொல்லிவிட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில் அந்தப்பெண்ணை ஜெபவீட்டில் வைத்து ஜெபித்தோம். அந்த விநோதமான வியாதிக்கு உண்மையான காரணம் அந்த ஆவிகளின் பிடியே. மூன்று நாட்கள் உபவாசம் வைத்திருந்தோம். இரண்டாவது நாள் இரவு அவள் தூங்கும்போது அந்தப் பிசாசுகள் அலறிக்கொண்டு ஓடிவிட்டது. அவள் பரிபூரண விடுதலை பெற்றாள்.

எல்லா வியாதிக்கும் மருத்துவரிடத்தில் ஓடி பணத்தை அழித்துக் கொள்ளாதீர்கள். 18 வருடமாய் ஒரு பெண் கூனியாயிருந்தது, அந்த அசுத்த ஆவியினாலே தான்.

சில ஆவிகள் செவிட்டுத் தன்மையையும் குருட்டுத் தன்மையையும் உண்டாக்குகிறது. எனவே ஆவிகளைப் பகுத்தறிந்து அவைகளைக் கட்டி ஜெபியுங்கள்.

## 42. ஜெப மொழிகள்.

1. தூக்கத்தை விரும்பாதே தொழுகையை விரும்பு
2. விசுவாசிக்காதவன் ஜெபமும், ஜெபிக்காதவன் விசுவாசமும் வீண்
3. ஜெபிக்க அறிந்தவன் ஜெயிக்க தெரிந்தவன்

4. கூடி ஜெபித்தால் கோடி நன்மை
5. ஊக்கமான ஜெபமே ஆக்கம் தரும்
6. ஜெபிக்கிறவனைக் கண்டு பிசாசும் நடுங்கும்
7. ஜெபத்தில் தூக்கம் செயலில் தேக்கம்

## 43. இரண்டு அந்தியோகியா.

அப்போஸ்தலனாகிய பவுல் ஊழியம் செய்த பட்டணங்களில் மிக முக்கியமான பட்டணம் அந்தியோகியா என்பதும் ஒன்று, இங்கே பல முக்கியமான சம்பவங்கள் நடைபெற்றன. ஆகிலும் அப்போஸ்தலர் நடபடிகளில் வேறொரு அந்தியோகியாவைக் குறித்தும் சொல்லப்பட்டதைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

முந்தினது சீரியாவிலுள்ள அந்தியோகியா, இது கிறிஸ்துவுக்கு முன் 300 ஆம் வருடத்தில் எருசலேமுக்கு அப்பால் 300 மைல் தொலைவில் கட்டப்பட்டது.

இந்த அந்தியோகியாவில் தான் முதல் முதல் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வழங்கப்பெற்றது (அப். 11 : 26). பிசீத்தியாவில் உள்ள அந்தியோகியா செசரியா என்றும் அழைக்கப்பட்டது. இது செல்யூகஸ் நிகோடார் என்பவரால் கட்டப்பட்டது. பவுல் தனது மிஷனெரிப் பயணங்களில் 3 முறை இப்பட்டணத்தை சந்தித்ததாக வேதம் கூறுகிறது. இந்த அந்தியோகியாவில் இருந்து வந்த யூதர்கள் தான் பவுலைக் கல்லெறிந்தார்கள். ஆகிலும் பவுல் அந்தியோகியாவில் தங்கி விசுவாசிகளுக்கு புத்தி சொல்லி பின்னர் தனது பயணத்திற்குக் கடந்து போனார். இந்த அந்தியோகியாவில் பவுலுக்கு உண்டான உபத்திரவங்களைக் குறித்து II தீமோத்தேயு 3 : 11இல் எழுதப்பட்டுள்ளது.



## 44. இன்னாருக்கு இன்னாரென்று!

நம்முடைய வேதம் ஒரு புருஷனுக்கு ஒரு மனைவியே என்று கூறுகிறது. ஆதாமிலிருந்து அவர் வருகை வரை இந்தத் திட்டத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. ஆகிலும் முற்பிதாக்களின் வாழ்க்கையில் சில மனைவிகளை வைத்திருந்தார்களே. இதைக் குறித்த தேவனுடைய நோக்கம் என்ன? என்ற அச்சம் உங்களுக்கு எழலாம். எத்தனை மனைவிகள் வைத்திருந்தாலும் தேவன் அவர்களுக்கு அங்கீகரித்தது ஒரே மனைவியைத்தான். அதிலும் முதல் முதலில் முறைப்படி கட்டின மனைவியைத்தான் அங்கீகரிக்கிறார்.

மக்பேலா குகையை சற்று சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். அங்கே சாராள் ஆபிரகாம் அடக்கம் பண்ணப்பட்டார்கள். ஆபிரகாமின் மற்ற மனைவிகளுக்கு அங்கு இடமில்லை. ஈசாக்கு ரெபேக்காள் அங்கு அடக்கம் பண்ணப்பட்டார்கள். (ஈசாக்குக்கு வேறு மனைவிகளில்லை.) யாக்கோபு அடக்கம் பண்ணப்பட்டார்.

அங்கு லேயாளும் சேர்த்தே அடக்கம் பண்ணப்பட்டார். அவனுடைய அடுத்த மனைவியாகிய ராகேலோ மற்ற மறுமனையாட்டிகளோ அடக்கம் பண்ணப்படவில்லை. இதிலே எவ்வளவு ஒழுங்கு பார்த்தீர்களா! தேவன் சட்டத்திற்குப் புறம்பாகத் துணைபோகிறவரல்ல. சகலத்தையும் நீதியாயும் நேர்மையாயும் செய்கிறவர்.

## 45. ராகேல் திருமணம் எப்போது நடந்தது?

யாக்கோபு லாபானின் குமாரத்திகளாகிய லேயாள், ராகேல் என்பவர்களை மணமுடித்து கொண்டான் என்றும் அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் ஏழாண்டுகள்

லாபானிடத்தில் யாக்கோபு வேலை செய்தானென்றும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் லேயாள், ராகேல் இவர்கள் திருமணம் எவ்வளவு கால இடைவெளியில் நடைபெற்றதென்று உங்களுக்குத் தெரியுமா? ஒருவேளை ஏழு வருடம் என்று சிலர் சொல்வீர்கள், உண்மை அதுவல்ல, வெறும் ஏழுநாட்கள் தான்.

லேயாளை மணமுடித்த மறுநாள் ராகேலுக்காக யாக்கோபு வாதாடினபோது, "இவளுடைய ஏழு நாட்களை நிறைவேற்று அவளையும் உனக்குத் தருவேன், அவளுக்காக நீ இன்னும் ஏழு வருடம் என்னிடத்தில் வேலை செய்" என்றான். அந்தப்படியே யாக்கோபு ராகேலுடைய ஏழுநாளை நிறைவேற்றினான்.

அப்பொழுது லாபான் தன் குமாரத்தியாகிய ராகேலை யாக்கோபுக்குக் கொடுத்தான் (ஆதி 29 : 27,28). ஆகவே லேயாள் ராகேல் இருவருக்கும் ஏழுநாள் வித்தியாசத்தில் திருமணம் நடைபெற்றது.

## 46. தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாதீர்கள்!

திருப்பதியில் நடந்த ஒரு திருவிழாவில் ஒரு திருடன் ஒரு குழந்தையின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடினான். வாலிபன் ஒருவன் திருடனைப் பின்தொடர்ந்து ஓடிப்பிடித்து விட்டான். அவன் கையிலிருக்கும் சங்கிலியையும் பறித்து விட்டான். இதற்குள் மக்கள் கூட்டம் அவர்களை நெருங்க ஆரம்பித்துவிட்டது.

நிலைமையைப் புரிந்து கொண்ட திருடன் கதையை அப்படியே மாற்றிவிட்டான். அந்த வாலிபனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "ஐயோ! திருடன் இவன்



கையில் சங்கிலியைப் பாருங்கள். இவனை சும்மா விடக்கூடாது உதையுங்கள்" என்று கத்தினான் அவ்வளவுதான், திருவாளர் பொது ஜனங்கள் அந்த வாலிபனை நையப்புடைத்து விட்டனர்.

அவன் எவ்வளவு சொல்லியும் அவன் நியாயம் எடுபடவில்லை. அதற்குள் சங்கிலியின் சொந்தக்காரி வந்துவிட்டாள். அவள் வந்து உண்மைத் திருடனை அடையாளம் காட்டினாள். அப்பாவி வாலிபனை அடித்தவர்கள் வெட்கினர். என்ன பிரயோஜனம்?

நீங்களும் தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல் நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள். (யோவான் 7 : 24)

## 47. தாழ்மை உள்ளவர்களுக்கே கிருபை!

ஒருமுறை ஒரு இளம் ஊழியர் தலைமைப் போதகரால் பிரசங்கத்திற்கு அழைக்கப்பட்டார். இந்த அரிய சந்தர்ப்பத்தினால் அவருக்கு ஏற்பட்ட அகமகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

எத்தனையோ பிரசங்கிமார்கள் இருக்க என்னைத்தானே அழைத்திருக்கிறார் என்ற பெருமிதத்தோடு பிரசங்கமேடைக்கு சென்றார். ஆனால் மேடைக்கு சென்ற அவருக்கு திரள் கூட்டத்தைப் பார்த்ததும் மாபெரும் பிரமிப்பு ஏற்பட்டது, வேர்த்து வெடவெடத்து பேச வந்த கருத்தை மறந்து திக்குத் திண்டாடி எப்படியோ பேசி முடித்து விட்டு நாணிக்கூனி வெட்கி வெளிறிய முகத்துடன் மேடையைவிட்டு இறங்கி வந்தார்.

அவரைப் பார்த்து தலைமைப் போதகர் சொன்னார், "தம்பி நீ வந்ததைப்போல் (தலைகுனிந்து) போயிருந்தால் போனது போல் (தலைநிமிர்ந்து) வந்திருப்பாய்" என்றார்.

ஆம்! தாழ்மை உள்ளவர்களுக்கே தேவன் கிருபை அளிக்கிறார்.

## 48. இஸ்ரவேலரின் காலண்டர்!

இஸ்ரவேலர் பஸ்கா பண்டிகை கொண்டாடின முதலாம் மாதம் ஆபிப் மாதம் எனப்படும் சிறையிருப்புக்குப்பின் இந்த மாதத்தை நிசான் என்று அழைக்கலாயினர்.

**இஸ்ரவேலரின் 12 மாதங்கள்**

1. நிசான் (நெகேமியா 2 : 1)
2. சீப் (1 இராஜா 6 : 1)
3. சீவான் (எஸ்தர் 8 : 9)
4. தம்மூஸ் (எசேக்கியேல் 8 : 14)
5. ஆபி
6. எலூல் (நெகேமியா 6 : 15)
7. ஏத்தானீம் (1 இராஜா 8 : 2)
8. பூல் (1 இராஜா 6 : 38)
9. கிஸ்லேயு (நெகேமியா 1 : 1)
10. நேபேத் (எஸ்தர் 2 : 16)
11. சேபாத் (சகரியா 1 : 7)
12. ஆதார் (எஸ்றா 6 : 15)

## 49. பார்க்கக் கூடாததும் பார்க்க வேண்டியதும்!

இப்பொதெல்லாம் திருமணத்தில் பல பொருத்தங்களை A,B,C,D,E என்று வரிசையாய் பார்க்கிறார்கள். A என்றால் Age (வயது) B என்றால் Beauty (அழகு) C என்றால் Caste (இனம்) D என்றால் Dowry



(பணம்) E என்றால் Education (கல்வி) என்று பார்க்கிறார்கள்.

இதைக் கர்த்தருடைய பிள்ளைகள் வெறுத்து ஆவிக்குள் A,B,C,D,E என்று பார்க்க வேண்டும். (A-anointing) அபிஷேகம், (B-Bible Reading) வேதவாசிப்பு, (C-Church Activities) சபையோடுள்ள ஐக்கியம், (D-Dedication) பிரதிஷ்டையின் ஜீவியம், (E-Earnest) உண்மை. இந்த அடிப்படையில் தான் மணமக்களை தெரிவு செய்ய வேண்டும்.

## 50. சில்லரை மாற்றவே முடியாது!

அறிஞர் அண்ணா அவர்கள் சிலவற்றிற்குச் சொல்லும் உதாரணங்கள் மிகச்சிறப்பானது. நாய் வாலை நிமிர்த்த முடியுமா? என்ற கேள்விக்கு பதிலைக்கான ஒருவன் ஒரு நாயைப் பிடித்து அதன் வாலை அடுப்பு ஊதும் இரும்புக் குழாய் எடுத்து அத்தோடு இணைத்து ஒரு அறை வீட்டிற்குள் பூட்டி விட்டானாம்.

ஒரு 5,6 நாட்கள் கழித்து நண்பர்களை எல்லாம் கூட்டி வைத்துக்கொண்டு நாய்வாலை நிமிர்த்திவிட்டேன் வந்து பாருங்கள் என்று சொல்லிக் கொண்டு கதவை திறந்தானாம். அப்பப்பா! அங்கு ஒரு பெரிய ஆச்சரியம். நாய்வால் நிமிரவில்லை, மாறாக இரும்புக் குழாயும் நாய்வால் போல் வளைந்து விட்டதாம். இது அண்ணா சொன்னது.

எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளியையும் மாற்றக் கூடுமோ? கூடுமானால் தீமை செய்யப்பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும். (எரேமியா 13 : 23) இது வேதம் சொல்வது.

## 51. எப்படித்தான் புரிய வைப்பது?

ஏதோ அழுகுரல் கேட்கிறதே என்ன அது? என்று பார்வையில்லாத ஒருவர் பக்கத்திலிருப்பவரைக் கேட்டார். தொண்டையில் பால் அடைத்துக் கொண்டு குழந்தை ஒன்று செத்துவிட்டது என்றார் அவர். பால் எப்படி இருக்கும்? என்று பார்வையில்லாதவர் கேட்டார். வெண்மையாக இருக்கும் இது பக்கத்திலிருந்தவர் பதில். வெண்மை எப்படி இருக்கும்? இது பார்வையில்லாதவரின் கேள்வி. பக்கத்திலிருப்பவர் சொன்னார் கொக்கு போன்று இருக்கும்.

பார்வையில்லாதவர் விட்டபாடில்லை. கொக்கு எப்படி இருக்கும்? என்று கேட்டார். சலித்துப்போன இவர் கையை கேள்விக்குறி போல் வைத்துக்கொண்டு இப்படி இருக்கும் என்று காண்பித்தார். அந்தக் கையை பார்வையில்லாதவர் தடவிப்பார்த்தார். 'ஐயோ! எவ்வளவு பெரிய பால்! இவ்வளவு பெரிய பால் குழந்தையின் தொண்டைக்குள்ளே போனால் குழந்தை சாகத்தானே செய்யும் என்ன புத்தியில்லாத மனிதர்கள்' என்று சலித்துக் கொண்டார்.

சிலருக்கு எப்படித்தான் விளக்கினாலும் உபதேசங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த ஞானக்குருடர்கள் எடுத்து சொல்பவர்களையே புத்தியில்லாதவர்களாக்கி விடுகிறார்கள்.

## 52. பிரயாசங்களை விட்டு இளைப்பாறுவார்கள்.

சென்னையில் ஒரு அடக்க ஆராதனையின் போது நடந்த சம்பவம். அங்கிருந்த எல்லாக் கல்லறைகளிலும் சிலுவை நாட்டப்பட்டு சிலுவையின் மத்தியில் RIP என்ற ஆங்கில எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தது. புதிதாய் வந்த



நபர் RIP என்றால் என்ன அர்த்தம் என்று கேட்டார். பக்கத்திலிருப்பவர் மிக வினயமாக Resurrection Impossible (உயிர்த்தெழுதல் அரிது) என்று சொன்னார். ஆனால் RIP என்றால் Rest in Peace (சமாதானத்தில் இளைப்பாறுகிறார்) என்று அர்த்தம்.

உண்மையில் எல்லோருக்கும் அருமையான அடக்க ஆராதனையும், அழகான கல்லறையும் எழுப்பப்பட்டாலும் கர்த்தருடைய நாளில் எல்லாக் கல்லறைகளும் திறக்காது. வேதத்தில் ஐசுவரியவானுக்கு அடக்க ஆராதனை நடந்தது. லாசருக்கு நடந்ததாகத் தெரியவில்லை. எனினும் லாசரு பரத்திற்கு சென்றார்.

எப்படி அடக்கம் பண்ணப்பட்டோம் என்பதல்ல. எப்படி மரிக்கிறோம் என்பதே முக்கியம். கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டு இளைப்பாறுவார்கள்.

## 53. சில எபிரேய வார்த்தைகளை தெரிந்து கொள்ளுங்கள்.

1. MISHKAN (மிஸ்கான்) வாசஸ்தலம் – (யாத். 33 : 7)
2. HEYKAL (அய்கால்) ஆலயம், கோட்டை – (1 சாமு. 1 : 9)
3. MIQDASH (மிக்டாஷ்) பரிசுத்தஸ்தலம் / பொருள் – (யாத். 25 : 8)
4. BERACHAH (பெராக்கா) ஆசீர்வாதம் – (2. நாளா. 20 : 26)

## 54. சில கிரேக்க பதங்களை தெரிந்து கொள்ளுங்கள்.

1. DOULOS (டுலோஸ்) அடிமை, சேவகன், ஊழியன் – மத். 8 : 9–ரோம. 1 : 1
2. DUNAMIS (டுனாமிஸ்) வல்லமை – அப். 1 : 8
3. EKKLESIA (எக்லீசியா) பிரித்தெடுக்கப்பட்டவர்கள் / அழைக்கப்பட்டவர்கள் – அப். 7 : 38
4. SOZO (சோ சோ) இரட்சிப்பு / விடுதலை – மத். 1 : 21

## 55. குறைவில்லாத வேதம்.

ஞாயிறு பள்ளியில் (SUNDAY SCHOOL) இருந்து வீடு திரும்பிய சிறுவன் ஒருவன் நாஸ்திகனாகிய தகப்பனுக்கு தான் கேட்ட கதையை மிகக் கவனமாக தன் தகப்பனுக்கு விவரமாகச் சொன்னான். இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடல் வழியாய் கடந்து போன சம்பவத்தை மிகுந்த விசுவாசத்தோடு அந்த சிறுவன் தன் தகப்பனுக்கு விவரித்தபோது தகப்பன் கடகடவெனச் சிரித்து, டேய் இதில் என்னடா கஷ்டம் இருக்கிறது. அப்பொழுதெல்லாம் செங்கடலில் முழங்காலுக்குக் கீழ் வரைக்கும் தான் தண்ணீர் இருந்தது. எனவே சுலபமாக கடந்துவிட்டார்கள் என்றார்.

அதைக்கேட்ட மகன் அல்லேலுயா ஸ்தோத்திரம் என்று எம்பி எம்பிக் குதித்தான். அப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன்டா குதிக்கிறே? என்ன விஷயம் சொல்லு என்றார். பையன் சொன்னான், ஆண்டவர் எவ்வளவு பெரியவர் பார்த்தீர்களா முழங்கால் அளவு தண்ணியில் பார்வோனின் இரதத்தையும் அவன் சேனையையும் மூழ்கடித்தாரே இது மாபெரும்



அதிசயமல்லவா என்றான். அப்பா அசடு வழிந்தார் மகன் அகமகிழ்ந்தான்.

வேதத்தை அவமாக்க நினைப்பவர்கள் முட்டாள்கள் ஆவார்கள். முட்டாள் ஆக்கப்படுவார்கள்.

## 56. அலெக்சாந்தர்.

அலெக்சாந்தர் என்ற பெயர் வேதத்திலுள்ள பெயரா? சரித்திர சம்பந்தமான பெயரா என்ற சந்தேகம் அநேகருக்கு உண்டு. இப்பெயரை புதிய ஏற்பாட்டில் மாற்கு சுவிசேஷம் 15ஆம் அதிகாரம் 21 வசனத்தில் முதன் முறையாக வருகிறது. நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பதிலாக சிலுவையை சுமக்கும்படி பலவந்தம் பண்ணப்பட்ட சிரேனே ஊரானாகிய சீமோன் என்பவரின் குமாரன் இந்த அலெக்சாந்தர். இரண்டாவதாக (அலெக்சாந்தரை குறித்து) அப்போஸ்தலர் நடபடிகள் 4ஆம் அதிகாரம் 6ஆம் வசனத்தில் பேதுருவையும் யோவானையும் விசாரணை செய்த ஆசாரியக்குடும்பத்தைச் சார்ந்த அலெக்சாந்தரைக் குறித்து வாசிக்கிறோம்.

எபேசுவில் அப்போஸ்தலனாகிய பவுலோடு தியானாள் காரியத்தில் உடனிருந்தவன் மூன்றாவது அலெக்சாந்தர் (அப் 19 : 33). எபேசுவில் (1 தீமோ 1 : 20) ஆதியில் விசுவாசியாக இருந்து பின்னர் வேதப்புரட்டினிமித்தம் சபையிலிருந்து தள்ளப்பட்ட அலெக்சாந்தரை குறித்து 1 தீமோ 1 : 20 இலும் பவுலுக்கு வெகு தீமைசெய்த கன்னானாகிய அலெக்சாந்தரை குறித்து 2 தீமோ 4 : 14இலும் வாசிக்கிறோம். இந்தப் பிந்தின இரண்டு அலெக்சாந்தரும் ஒருவரே என்று சிலர் கருதுகின்றனர். அலெக்சாந்தர் என்ற பெயருக்கு ‘ஜனங்களுக்கு உதவிக்காரன்’ என்று அர்த்தம்.

## 57. பெற்றுக்கொள்ளத்தக்கதாய் ஓடுங்கள்!

அமெரிக்கா தேசத்தில் 1984 செப்டம்பர் மாதம் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் ஒரு பரிதாபமான சம்பவம் ஏற்பட்டது.

இந்திய வீராங்கனையாகிய ஷைனி ஆபிரகாம் ஒரு குறிப்பிட்ட ஒட்டப்பந்தயத்தில் அபாரமாக ஓடி உலக சாதனை ஏற்படுத்தினார். ஆனால் ஒரு ஆச்சரியம்! பரிசு பெற அவருக்கு தகுதியில்லை என்று போட்டியின் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். தனக்கு நியமிக்கப்பட்ட தடத்தில் (Track) ஓடாமல் அடுத்தவர் தடத்தில் ஓடினதால் ஷைனி பரிசு பெறும் வாய்ப்பை இழந்தார்.

ஓடுவது முக்கியமல்ல, முதலில் வருவதும் முக்கியமல்ல, நமக்கு நியமிக்கப்பட்ட தடத்தில் ஓடுவதே முக்கியம். அழைப்பை மறந்து மாறி ஓடுவோமானால் நாம் வெட்கப்பட்டு போவோம்.

## 58. யோசேப்பும், தானியேலும்.

யோசேப்பும் தானியேலும் வாலிப வயதில் அந்நிய தேசத்திற்கு அடிமைகளாக கொண்டு செல்லப்பட்டனர்.

- ★ இருவருமே சொப்பனத்தை காண்கிறவர்களாகவும் சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்கிறவர்களாகவும் இருந்தனர்.
- ★ அந்நிய தேசத்தில் தங்களை கறைப்படுத்திக் கொள்ளாமல் தேவனுக்கு பயந்து வாழ்ந்தனர்.
- ★ இருவருமே தப்பு செய்யாமல் தண்டிக்கப்பட்டார்கள்.
- ★ இருவருமே ராஜாவினால் தங்களுக்கு அடுத்த ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டனர்.



## 59. அன்றியும் ஒரே தரம் மரிப்பதும்...

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லிக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் மரண வீடுகளில் அழுவதைத் தவிர்ப்பதில்லை.

மரித்தவர் மேல் உள்ள பாசத்தால் அழுகிறார்களா? அல்லது நாமும் ஒருநாள் மரிக்கப்போகிறோம் என்ற பயத்தால் அழுகிறார்களா? என்று தெரியவில்லை.

சென்னையிலே ஒரு கல்லறையில் "இன்றைக்கு நான் நாளைக்கு நீ" என்று எழுதப்பட்டிருக்கிறது. மதுரை கொடைரோடு அருகிலுள்ள கல்லறையில் "நீங்களும் ஒருநாள் இங்கு வருவீர்கள்" என்று எழுதப்பட்டுள்ளது. இது தான் மரணத்தின் தத்துவம். மண்ணில் பிறந்த எவனும் மண்ணுக்கே திரும்புவான்.

ஆனால் மரணம் மனித வாழ்வின் முடிவல்ல. அடைவைக்கப்பட்டிருக்கும் ஒரு முட்டையைக் கவனித்துப் பாருங்கள். 21 நாட்களுக்குப்பிறகு முட்டை உடைந்து பிளக்கிறது. ஆனால் அதற்குள்ளிருந்து உயிருள்ள ஒரு கோழிக்குஞ்சு வருகிறது. இங்கு ஒரே சமயத்தில் ஒரு முட்டைக்கு முடிவும் ஒரு கோழிக்குஞ்சுக்கு ஜீவனும் உண்டாகிறது.

இதைப்போலவே மரணம் என்பது ஒரு ஆத்துமாவின் மண் வாழ்விற்கு ஒரு முடிவாகவும் விண் வாழ்விற்கு ஒரு விடிவாகவும் இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

## 60. சத்துருக்களுக்காக விண்ணப்பம் பண்ணுங்கள்.

ஒருமுறை நானும் என் மனைவியும் ஊழியத்தை முடித்துக்கொண்டு இரவு வீடு திரும்பினோம். அப்பொழுது

எங்கள் வீட்டின் முன்பு எனது இரண்டு நண்பர்கள் (?) நின்று கொண்டிருந்தார்கள். எந்த விதத் தகவல் விசாரணையின்றி நான் செய்யாத குற்றத்திற்காக எடுத்த எடுப்பிலேயே என் நண்பர் ஓங்கி என் கன்னத்தில் அறைந்து விட்டார்.

அடியை வாங்கிக்கொண்டு என்ன செய்தோம் தெரியுமா? நேரே வீட்டிற்குள் சென்று நானும் என் மனைவியும் 'என் உள்ளம் தேவன்பால் பொங்கி வழியுதே' என்ற பாடலை ஆவியில் நிறைந்து அழுகையோடும் அந்நிய பாஷையோடும் பல மணிநேரங்கள் பாடிக் கர்த்தரைத் துதித்தோம்.

பல வருடங்கள் கழித்து ஒரு இனிமையான செய்தி எனக்கு வந்தது. என்னை ஒரு கன்னத்தில் அறைந்த நண்பர் ஒரு ஊழியராய் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். ஆனாலும் எனக்கு ஒரு கவலை அடுத்த நண்பனும் அடிக்காமல் போய்விட்டானே என்று ஏங்குகிறேன்.

ஸ்தேவான் கொலையாளிகளில் சவுல் ஊழியக்காரனானான். உங்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களுக்காய் ஜெபியுங்கள், ஊழியர்கள் பிறப்பார்கள்.

## 61. எனக்கென்ன தெரியும்!

இந்திய விஞ்ஞானிகளும், இரஷ்ய விஞ்ஞானிகளும் கூட்டு முயற்சியாக விண்வெளியில் ராக்கெட் ஒன்றை ஏவ முற்பட்டார்கள். முன் ஏற்பாடெல்லாம் முடிந்தது. ராக்கெட்டை ஏவுவதற்காக விசையை அழுத்தியவுடன் ராக்கெட் புறப்படவில்லை. எங்கே தவறு என்று தேடியும் கண்டுபிடிக்கமுடியவில்லை.

திடீரென்று இந்திய விஞ்ஞானி, செங்குத்தாக



நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ராக்கெட்டை 45 டிகிரி சாய்க்கச் சொன்னார். அப்படியே செய்தார்கள். மறுபடியும் செங்குத்தாக நிறுத்தி வைக்கச் சொன்னார். அப்படியே செய்தார்கள். இப்பொழுது விசையை அழுத்துங்கள் என்றார். அப்படியே செய்தார்கள். என்னே ஆச்சரியம்! ராக்கெட் விண்ணுக்கே ஏகிவிட்டது.

ஆச்சரியத்தில் மூழ்கிய இரஷ்ய விஞ்ஞானிகள் இந்திய விஞ்ஞானியின் கையைப் பிடித்துக்கொண்டு, எங்கே தவறு? எப்படி கண்டுபிடித்தீர்கள்? என்று கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள். எனக்கு எதுவும் தெரியாது, இந்தியாவில் ஸ்கூட்டர்கள் ஸ்டார்ட் ஆகாவிட்டால், ஒரு பக்கமாகச் சாய்த்து, பின்னர் நிறுத்தி ஸ்டார்ட் செய்வார்கள். அது நினைவிற்கு வந்தது. அப்படி செய்தேன் என்று ஒருபோடு போட்டார்.

இது பத்திரிக்கை ஆசிரியர் குஷ்வந்த் சிங் சொன்ன கதை. இன்றும் ஆவிக்குரிய உலகில் இப்படித்தான் நடக்கிறது. ஏன் செய்கிறோம், எதற்கு செய்கிறோம் என்று யோசிப்பது இல்லை. எவரோ, எதற்கோ செய்ததை தாங்களும் செய்து காரியம் புரியாமலேயே காலத்தை ஓட்டுகிறார்கள். விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே. மறந்து விடாதீர்கள்.

## 62. தலைவன் தலைவன் தான்!

யோசேப்பு சொப்பனம் கண்டு சொன்னபோது தகப்பனாலும் தமையன்களாலும் அதை ஜீரணிக்க முடியவில்லை. சகோதரர்கள் சதி செய்து சகதியில் போட்டார்கள். பின்னர் விற்றுப் போட்டார்கள்.

யோசேப்பு சொப்பனத்தில் கண்டது மாறவே இல்லை. போத்திப்பாரின் வீட்டில் அவன் தலைவன் தான்.

போத்திப்பாரின் மனைவியின் சதியால் சிறைக்குப் போனான். அங்கேயும் அவன் தலைவன் தான். சிறையிலிருந்து அரண்மனைக்குச் சென்றான். அங்கேயும் அவன் தலைவன் தான். அழைக்கப்பட்ட தேவ ஜனமே, உலைச்சல்களும் உபத்திரவங்களும் உங்களுக்கு வரலாம். உங்களை அழைத்தவர் எல்லா இடங்களிலும் உங்கள் தலைமைத்துவத்தைக் காப்பாற்றுவார். தேவன் அழைத்த அழைப்பும் அவரது கிருபா வரங்களும் மாறாதவைகளாயிருக்கிறது.

## 63. எதை விதைத்தாயோ அதையே அறுப்பாய்!

நாம் எதை விதைக்கிறோமோ, அதையே அறுப்போம் என்பது உண்மை. இந்த உண்மையை வேதத்திலுள்ள சம்பவங்கள் வெகு அழகாக நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

யாக்கோபு தனது தமையன் ஏசாவையும் தகப்பன் ஈசாக்கையும் ஏமாற்றினான். நடந்தது என்ன தெரியுமா? இந்த சாமார்த்திய சாலியை லாபான் மிக சுலபமாக ஏமாற்றி விட்டான். அது மட்டுமா? லேயாளும் லாபானுடன் சேர்ந்து கூட்டணி அமைத்து ஏமாற்றி விட்டாள்.

கதை இத்துடன் முடியவில்லை. ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு தன் தகப்பனை யாக்கோபு ஏமாற்றினான். அவன் பிள்ளைகளோ யோசேப்பின் அங்கியை ஆட்டு இரத்தத்தில் தோய்த்து யாக்கோபை ஏமாற்றிவிட்டார்கள். எதை விதைக்கிறோமோ, அதையே அறுப்போம். புரிகிறதா?



## 64. தேவனை வஞ்சிப்பவர்கள்.

தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று ஒருவர் புதியதாக தீர்மானித்திருந்தார். ஒருநாள் காலையில், “ஆண்டவரே, இன்று எனக்கு பணம் வேண்டும். இன்று எனக்குக் கிடைப்பதில் தவறாமல் தசமபாகத்தைச் செலுத்துவேன்” என்று ஜெபித்து முடித்து வெளியே சென்றார்.

அவருக்கு, வழியில் பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. கத்தையாக ரூபாய் நோட்டுகள் கீழே இருந்தன. இவர் ஓடிப்போய் அதை எடுத்து பொறுமையாக அடுக்கி எண்ணினான். மொத்தம் தொண்ணூறு ரூபாய் இருந்தது.

“ஸ்தோத்திரம் கர்த்தாவே, நீர் நல்லவர். எங்கே நான் தசமபாகம் கொடுக்காமல் போய் விடுவேனோ என்று எண்ணி பத்து ரூபாய் பிடித்துக்கொண்டு தொண்ணூறு ரூபாய் கீழே போட்டுள்ளீர். உமக்கு நன்றி என்று சொல்லி அவரே அதை செலவு செய்துவிட்டார்.

சிலர் இப்படித்தான். பணம் வரும் முன்பு தசமபாகம் தருவேன் என்று ஜெபிப்பார்கள். பணம் கையில் வந்துவிட்டால் ஏதாகிலும் போக்கு சொல்லி ஏப்பம் விட்டுவிடுகிறார்கள்.

## 65. நான் வெஜிட்டேரியன்.

ஒரு போதகர் தன்னோடு ஒரு புதிய நபரை அழைத்துக்கொண்டு ஒரு உணவு விடுதிக்குள் சென்றார். அங்கே இவர்களுக்கு முன்பாக வேறே இரண்டு போதகர்கள் அமர்ந்திருந்தார்கள். இந்த எதிர்பாராத சந்திப்பில் ஒருவருக்கொருவர் கை கொடுத்து தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

ஒருவர் சொன்னார், நான் பிரஸ்பிட்டேரியன் (PRESBYTERIAN). உடனே அடுத்தவர் நான் டிரினிட்டேரியன் (TRINITARIAN) என்றார். மூன்றாம் நபர் தனது கையை நீட்டி நான் யுனிட்டேரியன் (UNITARIAN) என்றார். புதிய நபருக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ சாப்பாட்டுக் காரியம் என்று எண்ணி தனது கையை நீட்டி நான் வெஜிடேரியன் (VEGETARIAN) என்றார். ஐயோ, இந்த சபை பிரிவுகளால் எத்தனை இடர்கள் தெரியுமா?

## 66. தலைவரின் கடிதம்.

அவர் ஒரு ஏழை. ஆனால், அரசியல் நாட்டம் உள்ளவர். ஒருநாள் தனது ஊரை விட்டு நானூறு கிலோ மீட்டர் பயணம் செய்து, தமிழகத்தின் தலைநகரின் வீதி வழியாய் நடந்து போய்க் கொண்டிருந்தார்.

அவ்வழியே அவரை அறிந்த ஒருவர் வந்தார். இவரைப் பார்த்தவுடனே, "என்னப்பா, இங்கே வந்திருக்கே" என்று கடிந்து கொண்டார்.

எனக்குக்கூட வர விருப்பம் இல்ல, "நீ கண்டிப்பாக வரவேண்டும். அவ்வளவு கூட்டத்திலும் உன் முகத்தைத் தேடுவேன் என்று தலைவர் கடிதம் எழுதியிருந்தார். மறுக்க முடியல. அதான் வந்துட்டேன்" என்றார்.

என்னடா இவன்! நம்மகிட்டேயே கதைவிடறான். இவனோ ஏழை. இவனுக்கு தலைவர் கடிதம் எழுதுவாரா என்ற சந்தேகத்துடன், "எங்கே, அந்தக் கடிதத்தைக் காட்டு" என்றார் நண்பர்.

இவர் பைக்குள் கையைவிட்டு, ஒரு பேப்பரை எடுத்தார். அது முரசொலி பத்திரிக்கை. அதில், "உடன் பிறப்பே, நீ மாநாட்டுக்கு வா" என்று கலைஞர் கடிதம் எழுதியிருந்தார். அதைக்கண்ட நண்பர் வெறுத்து ஓடியே போய்விட்டார்.



கட்சியின் தலைவர் பொதுவாக எழுதிய கடிதத்தை தனக்கே நேரடியாக எழுதியதாக எண்ணி தொண்டன் மகிழுகிறான் – செயல்படுகிறான். ஆனால் ஆத்தும நேசர் எழுதிய அன்புக் கடிதமாகிய வேத புத்தகத்தை தனக்கென்று உரிமை கொண்டாடாமல், அந்நிய காரியமாக எண்ணுகிற தேவ ஜனத்தைப் பார்க்கிற போது, என் உள்ளம் வேதனை அடைகிறது.

## 67. மன்னாவும் கிறிஸ்துவும்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு, கானான் தேசத்தை நோக்கி பயணம் செய்த நாற்பது வருடம் இந்த மன்னாவைப் புசித்தார்கள்.

**மன்னா என்பதற்கு இது என்ன?** என்பதே பொருள். இதை தூதர்களின் அப்பம் என்று சங்கீதத்தில் (சங். 78 : 25) சொல்லப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவுக்கு பல காரியங்களில் நிழலாயிருக்கிறது.

மன்னா வானத்திலிருந்து மண்ணுக்கு வந்த அப்பம். இயேசுவும் பரலோகத்திலிருந்து பூவுலகிற்கு இறங்கி வந்த ஜீவ அப்பமாக இருக்கிறார். (மத். 5 : 39; 6 : 51)

இது உருண்டையாகவும் வெண்மையாகவும் இருக்கும் (எண். 11 : 7). உருண்டை இயேசுவின் பூரணத்தையும் வெண்மை கிறிஸ்துவின் பரிசுத்தத்தையும் காண்பிக்கிறது.

இதை விருப்பப்படி சுட்டோ, வறுத்தோ, அரைத்தோ, அவித்தோ புசிக்கலாம். இயேசுவும் அவரவர் தேவைக்கேற்ப இரட்சகராய், வைத்தியராய், நண்பராய், மணவாளனாய்த் தம்மை வெளிப்படுத்தி திருப்தியாக்குகிறார்.

மன்னா பொழிந்த போது அதன் மகிமை தெரியாமல்

மிதித்துக் கொண்டே நடந்தார்கள். அது வானத்தின் அப்பம் என்று புரிந்து கொண்டபோதோ வாரிச் சேர்த்துக் கொண்டார்கள்.

இதைப்போலவே கிறிஸ்துவை அறியாதவர்கள் அவரை அலட்சியம் செய்கிறார்கள். அவரை அறிந்தவர்களோ அவரை இறுகப் பற்றிக் கொள்ளுகிறார்கள்.

மன்னா ஒரு குறிப்பிட்ட இடம் என்றோ, நபர் என்றோ பொழியப்படாமல் இஸ்ரவேலரின் பாளையம் முழுவதும் பெய்தது. தேவகுமாரனாகிய கிறிஸ்துவும் எல்லா இடங்களிலும் எல்லாருக்கும் தென்படுகிறார். எல்லா இடங்களிலும் எல்லாரையும் திருப்திபடுத்துகிறார்.

## 68. தமிழ் வேதாகமம்.

இந்திய திருநாட்டில் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன. அத்தனை மொழிகளிலும் தமிழ் மொழியில் தான் முதன்முதலில் திருமறை மொழிபெயர்க்கப்பட்டது என்பது நாம் மகிழ்ந்து தேவனைத் துதிக்க வேண்டிய சிறப்பு அம்சமாகும்.

நாம் தற்போது பயன்படுத்தும் தமிழ்மொழி (பெயர்ப்பு) வேதாகமத்திற்கு முன்னும் பின்னும் எத்தனையோ தமிழ்மொழிப் பெயர்ப்புகள் வெளிவந்தன. ஆனால், **ஐக்கியத்திருப்புதல் (UNION VERSION)** என்ற இஃது இன்று வரை நம்மிடையே நின்று நம்மைத் தேவனுக்குள் பெலப்படுத்துகிறது.

கி.பி. 1706ல் தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடிக்கு வந்த ஜெர்மன் தேசத்தைச் சார்ந்த சீகன் பால்க் என்ற மிஷனெரி வேதத்தை தமிழில் மொழிபெயர்த்தார். இவர் மார்ட்டின் லூத்தர் மொழியாக்கம் செய்த ஜெர்மன் மொழி வேதத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழில்



மொழியாக்கம் செய்தார். தமிழ் வளத்தில் செழுமை இல்லாமல் போனாலும் அந்நாட்களில் இது அரியதற்கு பெரும்முயற்சி ஆகும்.

அதன் பின்னர் ஜெர்மன் மிஷனெரியாக வந்த பெர்ஷியஸ் என்பவர் மிகவும் சிரமப்பட்டு மற்றுமொரு தமிழ் மொழிபெயர்ப்பை கி.பி. 1729ல் வெளியிட்டார். இவர் அங்கீகரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பை (AUTHORISED VERSION) அடிப்படையாக வைத்துக் கொண்டு மொழிபெயர்த்தார். இந்த மொழி பெயர்ப்பை இந்த நாள் வரை சில லுத்தரன் திருச்சபையார் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து நெல்லை மாவட்டம் புலியூர்க் குறிச்சி என்னும் கிராமத்தை வாங்கி, டோனாவூர் என்று பெயரிட்ட இரேனிஷியஸ் என்னும் மிஷனெரி கி.பி. 1833ல் மற்றுமொரு மொழிபெயர்ப்பை வெளியிட்டார். இதன் பிறகு கி.பி. 1858ல் H. பவர் என்பவர் தலைமையில் மொழித்திருத்தம் செய்யப்பட்டது. அதுவே நமது கரத்திலுள்ள ஐக்கியப் பதிப்பு (UNION VERSION) ஆகும்.

இதன் பின்னர் டாக்டர். L.P. லார்சன் தலைமையில் மற்றுமொரு மொழிப்பெயர்ப்பு கி.பி. 1936ல் பதிப்பாயிற்று. அதனையடுத்து டாக்டர். மோனகன் தலைமையில் குழுவாய்ச் சேர்ந்து மொழிபெயர்க்கப்பட்ட வேதம் கி.பி. 1946ல் வெளியிடப்பட்டது.

தற்போதைய தமிழ் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் மூலமொழிச் சுருள்களில் புதிய கண்டுபிடிப்புகளைக் கருத்தில் கொண்டும் தற்போதைய தமிழில் மொழிபெயர்க்க அருள்திரு டி. இராஜரீகம் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

எத்தனை மொழிபெயர்ப்புகள் வந்தாலும் பவர் ஐயர்

(BOWER) மொழிபெயர்த்த ஐக்கியத் திருப்புதல் தனது பவர் (POWER) குறையாமல் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## 69. யார் இந்த நாஸ்டார்டாம்?

இன்று எல்லா நாட்டினரையும், மதத்தினரையும் கவர்ந்து இழுத்திருக்கின்ற பெயர் இந்த நாஸ்டார்டாம்.

இந்த மைக்கேல் டி. நாஸ்டார்டாம் என்பவர் கி.பி. 1503ல் (14.12.1503) பிரான்சு தேசத்தில் பிறந்தார்.

இவரது குடும்பத்தார் 1512ல் யூதக் கொள்கையை விட்டுவிட்டு கத்தோலிக்க கிறிஸ்தவத்தைத் தழுவினார்கள். இலத்தீன், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளையும், கணிதத்தையும் கற்றுத் தேறிய இவருக்கு மருத்துவத்திலும், ஜோதிடத்திலும் மிகுந்த ஆர்வம் இருந்தது. இவரது சமகாலத்தில் டெலஸ்கோப்பை (TELE-SCOPE) கண்டுபிடித்த கலிலியோவும் வாழ்ந்தார் என்பது உங்களுக்கு ஒரு போனஸ் செய்தி.

1534ல் திருமணம் நடந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு அவரது மனைவியும், பிள்ளைகளும் மரித்துப்போனார்கள். இதனால் மனமுடைந்த அவர் சில ஆண்டு காலமாக தேசாந்திரியாய் அலைந்தார். இதற்குப் பிறகுதான் இந்தத் தீர்க்கதரிசன (?) திறன் இவருக்கு வந்திருக்கிறது.

இவர் எதையும் நேரடியாக எழுதாமல் குறிப்பை உணர்த்தும் வார்த்தைகளால் எழுதியுள்ளார்.

இன்னும் சொல்லப்போனால், வேறு லேங்குவேஜ் வார்த்தைகளை தன் இஷ்டத்திற்கு இன்செர்ட் பண்ணியிருக்கிறார். (மன்–னிச்சி–டுங்க அவர் மாதிரி எனக்கும் வேறு மொழி வார்த்தைகள் வந்து விடுகிறது.)

தனது தரிசன காட்சிகளை குவார்ட்ரெயின் என்று



பெயரிட்டு 1,2,3.... என வரிசையிட்டு எழுதியுள்ளர். கி.பி. 1585 வாக்கில் அவர் மரித்தார் என சில நூல் குறிப்புகள் சொல்லுகின்றன.

இந்த நாஸ்டார்டாமின் தீர்க்கதரிசனங்கள் வேத அடிப்படை கொண்டவைகள் அல்ல. இவை தீர்க்கதரிசனங்களைப் போல இருந்தாலும், விடுகதை வடிவில் இருப்பதினால், நிகழ்ச்சிகள் நடப்பதற்கு முன் கூட்டியே யாராலும் புரிந்து கொள்ள முடிவதில்லை. நிகழ்காலத்தில் நிறைவேறிய சில காரியங்களை நாஸ்டார்டாமின் எழுத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, அதுதான் இது, இது தான் அது என்று சிலர் ஓகோ வென்று புகழ்ந்து தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்களே! நாஸ்டார்டாம் தீர்க்க தரிசனங்களை அலசிக் கொண்டிராதேயுங்கள். நாதன் இயேசுவின் வார்த்தைகளை ஆராயுங்கள். அவைகளால் மாத்திரமே உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.

## 70. பிலிப்பு! பிலிப்பு! பிலிப்பு!

புதிய ஏற்பாட்டில் பிலிப்பு என்ற பெயர் பலமுறை வருகிறது. இந்தப் பெயரில் மூன்று நபர்கள் அந்நாட்களிலேயே வாழ்ந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்க காரியம்.

1. இரட்சகர் இயேசு கிறிஸ்து, தமது சீஷனாக இருக்கும்படி பிலிப்புவை அழைத்தார் (யோவான் 1 : 44) இந்த பிலிப்பு நாத்தான் வேலுக்கு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லி, "வந்து பார்" என்று அழைப்பு கொடுத்தான். இந்த பிலிப்புவை இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாக அழைத்தார் (மத். 10 : 3).

2. யோவான் ஸ்நானகன் ஊழியம் செய்த நாட்களில் யூதேயாவின் காற்பங்கு தேசமாகிய இத்துரேயாவுக்கு அதிபதியாக பிலிப்பு என்பவன் இருந்தான். அதேகால கட்டத்தில் மற்றுமொரு காற்பங்கு தேசமாகிய கலிலேயாவுக்கு ஏரோது அதிபதியாக இருந்தான். (லூாக் 3 : 1) இந்தப் பிலிப்புவின் மனைவிக்கும், ஏரோதுக்கும் இடையேயுள்ள தவறான உறவைக் கண்டித்த தினிமித்தம் யோவானின் தலை வெட்டப்பட்டது. (மத். 14 : 10).

3. அப்போஸ்தலர் காலத்தில் சபையில் ஏற்படுத்தப்பட்ட ஏழு உதவிக்காரர்களில் ஒருவனுடைய பெயர் பிலிப்பு (அப். 6 : 5) பின் நாட்களில் இவன் சுவிசேஷகன் என்றழைக்கப்பட்டான் (அப். 21 : 8). இவருடைய நான்கு குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் உரைக்கிறவர்களாயிருந்தார்கள் (அப். 21 : 9). எத்தியோப்பிய மந்திரிக்கு சத்தியத்தைச் சொல்லி ஞானஸ்நானம் கொடுத்தவன் இவனே (அப். 8 : 26–40).

## 71. போதகர்கள் சொன்னார்கள்.

★ "அல்லேலூயா என்ற சொல்லு – சாத்தான் பல்லை உடைக்கும் கல்லு" – (பாஸ்டர் M.S. ஜோசப்)

★ "உழைக்கும் மாட்டுக்கு கழுத்தில் காய்ப்பு உண்மை ஊழியனுக்கு முழங்காலில் காய்ப்பு"

★ நீ பிரசங்கிப்பதை நீயே செய் – இல்லாவிட்டால் நீ செய்வதை மற்றவன் பிரசங்கிப்பான். – (UNKNOWN)

★ "இலாபங்களெல்லாம் தேவ சித்தமென்று இறுமாந்து விடாதே



★ நஷ்டங்களெல்லாம் தேவ சித்தமல்ல என்று ஏமாந்து விடாதே" – (பாஸ்டர் A. கிறிஸ்டோபர்)

★ "விழுந்தவனை அடிக்கடி சொல்லி நீங்கள் பழகாமல் நிற்கிறவனை அடிக்கடி சொல்லிப் பழகுங்கள் அப்பொழுது நீங்களும் நிற்பீர்கள்"

– (பாஸ்டர் M. ராஜேந்திரன்)

★ "மோசே கர்த்தர் சொன்னவைகளை எழுதினான் யோவானோ கர்த்தர் காண்பித்தவைகளை எழுதினான் கர்த்தர் சொல்லுவதையும்; காண்பிப் பதையும் ஆவியில் நிறைந்து ஆவிக்குரியவர்கள் எழுதவேண்டும்" – (திருமறை பெரியார்)

★ "ஆராதனையில் நேரத்திற்கேற்ப ஆவியான வரை கட்டுப்படுத்தக்கூடாது: ஆவியானவரே ஆராதனையின் நேரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்" – (பாஸ்டர் M.K. சாம்சுந்தரம்)

★ "அஞ்சற்காரரை எதிர்பார்த்து நிற்பதல்ல – ஆகாயத்துப் பறவைகள் மூலம் போஷிப்பார் என்று அமர்ந்திருப்பதே உண்மையான விசுவாசம்" – (பாஸ்டர் P. ஸ்டீபன்)

## 72. ரூத்தும், எஸ்தரும்.

1. இந்த இரண்டு பெண்களின் பெயர்களிலும் வேத புஸ்தகத்தில் தனித்தனியே சரித்திர ஆகமங்கள் இருக்கிறது.

2. நகோமியின் ஆலோசனையைக் கேட்டபடியால், ரூத் போவாஸுக்கு மனைவியானாள். எஸ்தர் மொர்தேகாயின் ஆலோசனையைக் கேட்டபடியால் அகாஸ்வேருக்கு மனைவியானாள். இது இவர்களிருவருக்கும் இடையேயுள்ள ஒற்றுமையாகும்.

**1.** எஸ்தர் புத்தகத்திற்கு வெளியே எஸ்தரின் பெயரை திருமறையில் காணமுடியாது. ரூத்தின் பெயரை புதிய ஏற்பாட்டின் முதல் அதிகாரத்திலேயே காணமுடியும்.

**2.** எஸ்தர் யூத குலத்தவளாயிருந்து புறஜாதி அரசன் அகாஸ்வேருக்கு மனைவியானாள். ரூத்தோ புறஜாதிப் பெண்ணாக இருந்து யூதகோத்திரத்தானாகிய போவாஸுக்கு மனைவியானாள். இது இவர்களுக்கு இடையேயுள்ள வேற்றுமை ஆகும்.

## 73. சகலமும் நன்மைக்கே!

ஒரு சிறிய பையன் தனது சிறிய விளையாட்டுப் படகை நூலில் கட்டி ஒரு குளத்துத் தண்ணீரில் மிதக்கவிட்டு கரையில் இருந்தவாறே விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தான்.

எதிர்பாராமல் அவன் கையில் பிடித்திருந்த நூலை தவற விட்டுவிட்டான். அவ்வளவுதான். அந்த படகு இவன் கைக்கு எட்டாத தூரத்தில் குளத்தின் நடுவிற்கே சென்று விட்டது. இவனுக்கோ நீச்சல் தெரியாது. தண்ணீரில் இறங்கவும் பயம். எனவே கரையில் அழுதுகொண்டே நின்று கொண்டிருந்தான்.

அவ்வழியே வந்த வாலிபன் ஒருவன் இவனது காரியத்தை கண்டு உதவ முன்வந்தான். கரையில் கிடந்த ஒரு பெரிய கல்லை கையில் எடுத்து, படகை நோக்கி வீசினான். இந்த காட்சியை கண்டு திடுக்கிட்ட அந்த சிறிய பையன், “ஐயய்யோ! என் படகின் மேல் கல்லைப் போடாதீர்கள்—” என்று தரையில் புரண்டு அழ ஆரம்பித்து விட்டான்.

நடந்தது என்ன தெரியுமா? இந்தக் கல் படகுக்கு அப்பாலே போய் விழுந்தது. உடனே வட்டவட்டமாய்



அலைகள் எழும்பின. இந்தச்சிறியவனுக்கு பெரிய மகிழ்ச்சி கையை நீட்டி படகை எடுத்துக்கொண்டான்.

நமது வாழ்விலும் இப்படித்தான். நமது இக்கட்டான சூழ்நிலையில் தேவனுடைய நடத்துதலை நம்மால் புரிந்து கொள்ளமுடிவதில்லை. ஓ! இது பாதகமாய் முடியுமே, என்று அஞ்சுகிறோம். அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர். கிரியையில் மகத்துவமானவர். எனவே, அவரிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடைபெறும். அந்தச்சிறிய பையனைப்போல் புலம்பாதீர்கள், புரளாதீர்கள், பொறுமையாயிருங்கள்.

## 74. இஸ்ரவேலரின் இரவும் – பகலும்.

இஸ்ரவேலர் பகலை நான்கு ஜாமங்களாகவும், இரவை நான்கு ஜாமங்களாகவும் பிரித்து வைத்து உள்ளனர். ஆதியாகமத்தில் சாயங்காலமும் விடியற்காலமுமாகி, முதலாம் நாளாயிற்று என்று எழுதப்பட்டுள்ளபடியே, இஸ்ரவேலரும் சூரிய அஸ்தமனத்தையே நாளின் துவக்கமாக எண்ணுகின்றனர்.

**இராச்சாமம் :**

ஜாமம் 1 : சூரிய அஸ்தமனம் முதல் இரவு 9 மணி வரை
ஜாமம் 2 : இரவு 9 மணி முதல் நடுநிசி வரை
ஜாமம் 3 : நடுநிசி முதல் அதிகாலை 3 மணி வரை
ஜாமம் 4 : அதிகாலை 3 மணி முதல் சூரிய உதயம் வரை

**பகலின் ஜாமங்கள் :**

ஜாமம் 1 : சூரிய உதயம் முதல் காலை 9 மணி வரை
ஜாமம் 2 : காலை 9 மணி முதல் நடுப்பகல் வரை
ஜாமம் 3 : நண்பகல் முதல் பிற்பகல் 3 மணி வரை
ஜாமம் 4 : பிற்பகல் 3 மணி முதல் சூரிய அஸ்தமனம் வரை

## 75. ஒரு மனப்பட்ட ஜெபம்.

ஒரு பெரிய வெண்கல மணி ஒன்று கடல் நீரில் மூழ்கிவிட்டது. அதை வெளியே கொண்டு வர பல்வேறு முயற்சிகள் செய்தும் பயனில்லாமற் போய்விட்டது.

நல்யோசனைக்குப் பின்பு வேறு முறையை கையாள ஆரம்பித்தார்கள். பெரிய மூங்கில்களை கொண்டு வந்தார்கள். ஒன்றன் பின் ஒன்றாக, ஒவ்வொரு மூங்கில்களாக தண்ணீருக்குள் அமிழ்த்தி எடுத்துச்சென்று, மூழ்கிப்போன மணியின் வளையத்தில் கட்டினார்கள்.

என்னே ஆச்சரியம்! அந்த இலேசான மூங்கில்கள் ஒன்று சேர்ந்து தெப்பம் போலாகிவிட்டது. அவைகள் மணியுடன் மேலே கிளம்பி, மிதக்க ஆரம்பித்து விட்டது.

எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. அதை அப்படியே கரைக்கு இழுத்து வந்துவிட்டார்கள்.

பெரிய காரியமா? பயப்பட வேண்டாம். ஒரு மனப்பட்டு ஜெபியுங்கள். நடக்காத காரியம் நடக்கும்.

## 76. இயேசு – தாவீதின் குமாரனா?

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் முதல் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள வம்ச வரலாறு அட்டவணையை நன்றாக கவனித்துப் பாருங்கள்! தாவீதின் வழியிலே யோசேப்பு வருகிறார். யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட மரியாளிடத்தில் இயேசு கிறிஸ்து பிறந்தார்...

பரிசுத்த ஆவியினால் மரியாளிடத்தில் இயேசு பிறந்தபடியால், யோசேப்பு மாம்சத்தின் படி இயேசுவுக்கு தகப்பனில்லை. இப்படியிருக்க, இயேசு தாவீதின் வழியில் வந்தவர் என்று எப்படிச் சொல்ல முடியும்? இதைக்குறித்து நீங்கள் யோசித்ததுண்டா?



இதற்கு மிகச் சரியான பதில் வேதத்திலேயே உள்ளது. லூக்கா எழுதின சுவிசேஷம் மூன்றாம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை கவனித்துப்பாருங்கள். இதில் குறிப்பிட்ட சில வித்தியாசங்களைக் காண முடியும்.

மத்தேயு தந்துள்ளது யோசேப்பின் வம்ச வரலாறு. லூக்கா தந்திருப்பது மரியாளின் வம்ச வரலாறு. இயேசு யோசேப்புக்குப் பிறக்காவிட்டாலும், தாவீதின் வம்சத்தில் வந்த மரியாளிடத்தில் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தாவீது சாலமோனைப் பெற்றான் (மத். 1 : 6) இது தாவீதிலிருந்து பிரியும் யோசேப்பின் கிளை.

நாத்தான் தாவீதின் குமாரன் (லூக். 3 : 31). இது தாவீதிலிருந்து நாத்தான் மூலம் வந்த மரியாளின் கிளை.

இப்படி இரண்டு கிளைகள் தாவீதிலிருந்து பிரிந்து மீண்டும் யோசேப்பு – மரியாளில் இணைகிறது.

எனவே எப்படிப்பார்த்தாலும் இயேசு தாவீதின் குமாரனாயிருக்கிறார். அல்லேலூயா.

## 77. அத்திரமரம் துளிர்த்து விட்டது!

கர்த்தர் தமது வருகையின் அடையாளங்களைக் குறித்துச் சொல்லும்போது அத்திமரம் துளிர்விட்டு, அதின் இளங்கிளைகள் தோன்றும் போது வசந்தகாலம் சமீபமாயிருக்கும் என்று உவமையாய்ச் சொன்னார்.

இங்கே சொல்லப்பட்ட அத்திமரம் என்பது இஸ்ரேலருடைய அரசியல் வாழ்வைக்குறிக்கிறது. இயேசுவின் ஊழியத்தில் அத்திமரம் சபிக்கப்பட்டது போலவே, இயேசுவை நிராகரித்த யூதர்களுடைய வாழ்வும் கி.பி. 70ல் ரோம சக்கரவர்த்தியாகிய தீத்து இராயனால் அழிக்கப்பட்டது. அன்று முதல் அவர்களுக்கு சொந்த இராஜ்ஜியம் இல்லாமல் சிதறிப்போனார்கள்.

கர்த்தரின் வருகைக்கு முன்பு இந்தப்பட்டுப் போன தேசம் துளிர்விட வேண்டும். முதல் நூற்றாண்டுக்குப்பிறகு இந்த இருபதாம் நூற்றாண்டு வரை இஸ்ரவேலர் இராஜ்ஜியம் இல்லாமல் இருந்தார்கள். ஆனால் முதல் உலகப்போரிலும், இரண்டாம் உலகப்போரிலும் யூத விஞ்ஞானிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் செய்த உதவிகளினிமித்தம் 1948 மே மாதம் 14ம் தேதி சுதந்திர நாடாய் இஸ்ரவேல் என்கிற தேசம் துளிர்விட்டது.

இப்பொழுது முழு உலகத்திலேயே அறிவிலும், ஆஸ்தியிலும், அழகிலும் ஏன் அனைத்திலும் இஸ்ரவேல் தேசம் மிஞ்சியும், விஞ்சியும் நிற்கிறது.

சுதந்திரம் பெற்ற போது டெல்–அவிவ் தலைநகரமாயிருந்தது, இப்பொழுதோ வேத வசனத்தின்படி எருசலேம் தலைநகரமாக்கப்பட்டிருக்கிறது.

எபிரெய மொழி உயிர்ப்பிக்கப்பட்டு, அந்த மொழியிலேயே பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ளது.

வேத காலத்து முறைமையின்படி சேக்கல் என்ற பணப்பழக்கம் அதிகாரப்பூர்வமாய் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆக, அத்திமரம் துளிர்விட்ட தோடல்லாமல், அதில் இளங்கிளைகள் தோன்றி பூப்பூத்திருக்கிறது.

மாரநாதா! இயேசு வருகிறார்!
ஆயத்தப்படுங்கள்! ஆயத்தப்படுத்துங்கள்!

## 78. கதிரியக்கத்தால் கஷ்டகாலம்.

கர்த்தரின் வருகை சமீபித்திருக்கிற இந்தக் கடைசி காலத்தில் உலகை கலக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நவீன காலத்தில் அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள அணுசக்தி புரட்சியினால் மாபெரும் ஆபத்து



உலகில் உள்ள உயிரினங்களுக்கு ஏற்படத் துவங்கியிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் அக்கினி மழை என்றும், சூரியனுடைய தகிப்பு என்றும் சொல்லப்பட்டிருக்கிற வாதைகள் அமில மழை என்றும், கதிரியக்கம் என்றும் இன்று உலகத்தைக் கலக்கிக் கொண்டிருக்கிறது.

இதோ ஓர் பத்திரிக்கை செய்தி! அமெரிக்கா மினோஸோட்டா நகரில் உயிரினங்கள் தொடர்பான கல்வி சுற்றுலா சென்ற மாணவர்கள் அப்பகுதியில் வழக்கத்திற்கு மாறான தவளைகளைக் கண்டுபிடித்தனர். அவர்கள் பிடித்த தவளைகளில் பாதிக்குமேல் பாதிக்கப்பட்டிருந்தது.

ஒன்பது கால்களுடன் தவளைகள். முக்கண்ணுடன் தவளைகள். ஒரு தவளைக்கு தொண்டையில் கண் இருந்தது. ஹாக்கி மட்டையைப் போன்ற கால்கள் ஒரு தவளைக்கு இருந்தது.

பூச்சிக் கொல்லி மருந்துகள், ஆலைகளின் நச்சுப் புகை கலந்த மேகங்கள் பொழியும் அமிலமழை, கதிர்வீச்சுகள் இப்பேர்ப்பட்ட பாதிப்பை உருவாக்குகிறது என்று மினோஸோட்டாவைச் சேர்ந்த பேராசிரியர் விளக்குகிறார்.

இந்த நிலை தொடர்ந்து வந்தால், மனுக்குலத்திற்கும் இதே கதி ஏற்படும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர் என்று அப்பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரியமானவர்களே! கர்த்தருடைய வருகை சமீபம் என்பதற்கும், வேதத்தில் சொல்லப்பட்டவைகள் நிகழப்போவது உண்மை என்பதற்கும் இதைவிட வேறு சான்று தேவையா? அசதியாயிராதேயுங்கள்! ஆயத்தப்படுங்கள்!

## 79. மரணம்! மரணம்! மரணம்!

அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதாமிலிருந்து இனிவரும் சந்ததிவரை மரித்தே ஆகவேண்டும். அது மாம்ச மரணத்தைக் குறிக்கிறது. ஆனால் ஆத்மா சாகப்போகிற நித்தியமான இரண்டாம் மரணத்தைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதுவே நித்திய நரகாக்கினை ஆகும். அந்த மரணத்தை அடைவதற்கு முன்பாக இந்த உலகத்திலேயே சில ஆவிக்குரிய மரணங்கள் நம்மை நோக்கி வருகிறது. அவைகளை ஜெயித்திடல் வேண்டியது அவசியமாகும்.

இதோ அவைகள் :

1. பாவத்தின் சம்பளம் மரணம் – ரோமர் 6 : 23.
2. மாம்ச சிந்தை மரணம் – ரோமர் 8 : 6
3. லௌகீக துக்கம் – 1. கொரி. 7 : 10
4. சுகபோகமாய் வாழ்வது – 1. தீமோ. 3 : 6
5. சகோதரனில் அன்பு கூராமை – 1. யோவான் 3 : 14

இவைகளை ஜெயிக்க கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக.

**இதோ இதையும் கவனியுங்கள்!**

1. அவரை விசுவாசிக்கிறவனுக்கு மரணமில்லை – யோவான் 11 : 26
2. வசனத்தைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு மரணமில்லை – யோவான் 8 : 51
3. பந்தியில் பங்கேற்பவர்களுக்கு மரணமில்லை – யோவான் 6 : 58

மரணத்தை ஜெயிப்போம்! மகிமையில் மகிழ்வோம்!



## 80. ஜீவன்! ஜீவன்! ஜீவன்!

நம்முடைய பிதாவானவர் நமக்கு நித்திய ஜீவனை அருளும்படி தம்முடைய குமாரனாகிய கிறிஸ்தேசுவை தந்தருளினார். எனவேதான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நித்திய ஜீவன் உண்டாயிருக்கிறதென்று ரோமர் நிருபத்தில் பவுல் குறிப்பிடுகிறார்.

பரலோகத்தில் நம்முடைய நித்திய ஜீவனை நிலைப்படுத்துகிற செழிப்பாக்குகிற இரண்டு காரியங்களைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வெளிப்படுத்தல் 22ஆம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களில் 1. ஜீவத்தண்ணீர், 2. ஜீவ விருட்சம் ஆகியவற்றைக் குறித்து எழுதப்பட்டுள்ளது.

அவருடைய சிங்காசனத்திலிருந்து பளிங்கு போன்ற தன்மையுடன் புறப்பட்டு வருகிற நதி ஜீவ நதி எனப்படும். இந்த தண்ணீரை நாம் நித்தியத்தில் பருகுவோம். (வெளி 7 : 17). இது நம்முடைய ஆயுளை நித்திய காலமாய் காத்துக்கொள்ளும்.

இங்கே ஒரு விசேஷத்தைக் கவனியுங்கள்! பன்னிரண்டு மாதத்துக்கும், பன்னிரண்டு விதமான புதிய கனிகளைத் தருகிற புதிரான மரம் அஃது.

ஏதேனில் இந்த ஜீவ விருட்சத்தை மனிதன் புசிக்கலாகாது என்று ஆதாமினிமித்தம் தடைசெய்த ஆண்டவர் எடுத்துக் கொள்ளப்படப் போகிற தேவ ஜனத்திற்கு அஃதினை அருளப்போகிறார்.

நாம் ஜீவக்கனியை புசிப்போம். அது மட்டுமா? அந்த விருட்சத்தின் இலைகள் ஆரோக்கியத்திற்கேதுவாக இருக்கும்.

அங்கே தாகம் இல்லை, பசி இல்லை, ரோகமும் இல்லை. என்றும் ஆனந்தம். ★★★

# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**